விலை ரூபா: 7.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
கோ
சீமெந்து

பக்கங்கள்:- பன்னிரண்டு
சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2035 | மார்கழி 21 | புதன்கிழமை (05.01.2005) | தொலைபேசி 2223378, 2227644 | ஒலி 17

## பிரிட்டிஷ் இராணுவக் குழுவினர் கிழக்கு மாகாணத்துக்கு விஜயம்

(மட்டக்களப்பு)

பிரிட்டிஷ் இராணுவ குழுவொன்று நேற்று கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்து சுனாமி அலையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டுள்ளது.

இக்குழுவினர் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களின் அரச அதிபர்களையும் சந்தித்து நிலைமைகளை கேட்டறிந்து கொண்டனர். சுனாமி அலையினால் பிரிட்டிஷ் உல்லாச பயணிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்களா என்பது பற்றி அறியும் நோக்கிலும் இங்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நிவாரணப் பணிகள் பற்றியும் அறிந்து கொள்வதற்காகவே பிரிட்டிஷ் இராணுவக் குழு கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்ததாக பிரிட்டிஷ் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை இலங்கைக்கு வந்துள்ள அமெரிக்கப் படைகளில் பல பெண்களும் வந்துள்ளனர். அவர்கள் அனைவரிடமும் ஆயுதங்களும் தொலைத் தொடர்பு சாதனங்களும் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இலங்கையின் பல்வேறு பகுதிகளிற்கும் இப்படைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

(ச)

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் இன்று யாழ்ப்பாணம் வருகை

எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

யாழ். வரும் ரணில், சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களையும் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களிலுள்ள மக்களையும் பார்வையிடுவார்.

வடமராட்சியில் ஊடகவியலாளர்களையும் சந்திக்கவுள்ள அவர் யாழ். அரச அதிபர் கே. கணேசையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

இவருடன் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் வருகைதரவுள்ளனர்.

(ச)

# புலிகளை ஓரங்கட்டச்சதி நிவாரணப் பணிகள் முப்படைகள் வசம்!

### நெதர்லாந்து உதவி வழங்கும்

(கொழும்பு)

கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு அவசர மனிதாபிமான உதவிகளை வழங்க நெதர்லாந்து முன்வந்துள்ளது.

அத்துடன் இலங்கையின் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு உதவுவதாகவும் நெதர்லாந்துப் பிரதமர் ஜான் பீற்றர் போல் ஹானண்டே தெரிவித்துள்ளார். (இ-04)

## சுனாமியால் அழிவுற்ற தேசத்தை கட்டியெழுப்ப முன்வாருங்கள்!

### யாழ். மாவட்ட அரசியல்துறை அழைப்பு

(யாழ்ப்பாணம்)

சுனாமி பேரலை அழிவிலிருந்து எமது தேசத்தை மீளவும் கட்டியெழுப்புவதற்கு ஒவ்வொருவரும் முன்வரவேண்டும் என்று யாழ். மாவட்ட அரசியல்துறையினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

பேரலை அழிவினால் பாழடைந்து போயுள்ள பகுதிகளை துப்புரவு செய்வதற்கும் கட்டட இடிபாடுகளை அகற்றுவதற்கும் தொண்டர்களை ஒன்றிணையுமாறும் அரசியல்துறை கேட்டுள்ளது.

துப்புரவுப் பணியாற்ற முன்வருமாறு பொது அமைப்புக்களையும் தனிநபர்களையும் அரசியல்துறையினர் வேண்டியுள்ளனர்.

இதேவேளை இப் பணியாற்ற முன்வருபவர்கள் தங்களிற்கு அருகிலுள்ள அரசியல்துறை செயலகத்துடன் தொடர்பு கொண்டு வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்திற்கு வருகை தருமாறும் கேட்கப்பட்டுள்ளது.

(ச-101)

## ஜனாதிபதி அதிரடி முடிபு

(கொழும்பு)

சுனாமி கடல் அலைத் தாக்கத்தினால் பேரழிவுக்குட்பட்ட இலங்கையின் சகல மாவட்டங்களிலும் நிவாரணப் பணிகளை முன்னெடுக்கும் பொறுப்பு முப்படைகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இந்தத் தீர்மானம் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் செயல்படுத்தப்படவுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க படைகளின் வருகை அரசியலில் பிளவை ஏற்படுத்தும்

### ஜே.வி.பி. எம்.பி. எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கு அமெரிக்கப் படையினர் வந்துள்ளமை இலங்கையின் அரசியலில் பாரிய பிளவை ஏற்படுத்தும் என ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியின் அனுமதி பெறாமல் அரசாங்கம் அமெரிக்கப் படையினரை அழைத்துள்ளது. இதனால் ஜே.வி.பி. - சந்திரிகா அரச (12 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு!

வடமராட்சி தூதாவளை செம்பாடு பகுதியில் கிணற்றிலிருந்து சடலம் ஒன்று மீட்கப்பட்டது. மீட்கப்பட்ட சடலம் கரணவாய் தெற்கு கரவெட்டியைச் சேர்ந்த குமாரு சின்னத்துரை (வயது 58) என அடையாளம் காணப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றவர் வீட்டிற்கு வராததால் அவர் வேலைசெய்யும் இடத்திற்குச் சென்று பார்த்ததாகவும் எனினும் அவர் அங்கு இருக்கவில்லை என்றும் அவரது மனைவி தெரிவித்தார்.

இதேவேளை நேற்று நண்பகல் பிரஸ்தாப நபரின் மோட்டார் சைக்கிள் நிற்பதைக் கண்ட ஒருவர் பக்கத்திலிருந்த கிணற்றைப் பார்த்தபொழுது அங்கு அவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. இதனை அடுத்து

(12 ஆம் பக்கம் பார்க்க)



சுனாமியால் இடம்பெயர்ந்த 6 அடி நீளமான முதலை கரவெட்டி கோவில் சந்தை பிரதான வீதியில் மீட்புப் பணியாளர்களால் மீட்கப்பட்டது. மீட்கப்பட்ட முதலையை படத்தில் காண்கிறீர்கள்.

படம்: எஸ். இராமச்சந்திரன்

## நோர்வே தூதுவர் பிறஸ்கர் நேற்று யாழ்ப்பாணம் விஜயம்

(கொழும்பு)

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிறஸ்கர் தலைமையிலான குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு வந்தனர். யாழ். வந்த அவர்கள் யாழ். அரச அதிபர் கே. கணேசை செயலகத்தில் வைத்து சந்தித்தனர்.

இச் சந்திப்பின்போது சுனாமி இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலைப்பாடுகள், நிவாரணம் மற்றும் சுகாதார உதவிகள் என்பன குறித்து விரிவாக ஆராய்ந்தனர். பின்னர் பாதிக்கப்பட்ட பிரதேசங்களையும் அகதிமுகாம்களில் நிர்க்கதியாக உள்ள மக்களையும் சென்று பார்வையிட்டனர்.

இதேவேளை வரும்வழியில் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடினர். இச் சந்திப்பின்போது பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தேவைகள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

(க-19)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நலன்புரி முகாம்களிலுள்ள மக்களுக்கு மூன்று வேளைகளும் சமைத்த உணவு

## யாழ். செயலகம் வழங்கிவருவதாக அரச அதிபர் கே. கணேஷ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சுனாமியினால் யாழ். மாவட்



டத்தில் பாதிக்கப்பட்டு நலன் புரி நிலையங்களில் வாழ்ந்துவரு கினற மக்களுக்கு யாழ். மாவட்ட செயலகத்தினால் மூன்றுவேளை சமைத்த உணவுகள் வழங்கப் பட்டு வருகின்றன.

அத்துடன் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு நண்பர் மற்றும் உறவினர்களின் வீடுகளில் தங்கிவாழும் மக்களுக்கு உலா உணவுப் பொருட்கள் வழங்கப் பட்டு வருகின்றன என யாழ். மாவட்ட அரச அதிபர் கணேஷ தெரிவித்தார்.

நலன்புரி நிலையங்கள் அமைந்துள்ள இடங்களில் அந் தந்தப் பகுதி கிராம சேவையா ளர்கள் முகாம் அதிகாரியாக நியமிக்கப்பட்டு அவர்கள் ஊடா கவே இந்தப் பொருட்கள் வழங் கப்பட்டு வருகின்றன.

மேலும் யாழ். செயலகத்தி னால் நேற்று முன்தினம் உண வல்லாத நிவாரணப் பொருட் கள் மருதங்கேணியிலுள்ள மக்களுக்கும் நேற்றையதினம் கரவெட்டி, பருத்தித்துறை மக்க ளுக்கும் வழங்குவதற்கென அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என வும் அரச அதிபர் மேலும் தெரி வித்தார். (ந-19)

## வடக்கிற்கு 2 ஆயிரம் மெ.தொன் உணவுப் பொருட்கள் அனுப்பிவைப்பு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக் கபபட்ட வடபகுதி மக்களுக்கு உதவும் பொருட்டு 2 ஆயிரம் மெற்றிக் தொன் நிறையுடைய உணவுப்பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஜனாதி பதி சந்திரிக குமாரதுங்க தெரி விததுள்ளார்.

பி.பி.ஸியின் ஹிந்தி சேவைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மருந்துப்பொருட்கள், மருத் துவ உபகரணங்கள் இவற்றில் சேர்க்கவில்லை. இலங்கையின் தெற்குப்புறத்தில் மூன்று மாவட டங்கள் மிக மோசமாகப் பாதிக் கப்பட்டுள்ளன.

வடக்கே யாழ்ப்பாணம், முல் லைத்தீவு ,கிளிநொச்சி ஆகிய பகுதிகளைவிட தெற்குப் பகுதியில் மக்களின் எண்ணிக்கை அதிகம். ஆனாலும் தெற்குப் பகுதிக்கு 180 மெற்றிக் தொன் உணவுப் பொருட்களை அனுப்பியுள்ளேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந் துளள மேற்படி கப்பலில் இருந்து பொருட்களை இறக்கும் பணிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் நடைபெற்றுவருகிறது. (ச)

## ஐ. நா. செயலாளர் நாயகம் வெள்ளியன்று இலங்கை வருகை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான வெள்ளியன்று இலங்கைக்கு விஜ யம் மேற்கொள்ளவுள்ளார்.

இரண்டு நாட்கள் இலங்கை யில் தங்கியிருக்கும் அவர் ஜனாதி பதி சந்திரிகா குமாரதுங்க, வெளி விவகார அமைச்சர் உட்பட முக்கிய பிரமுகர்கள் பலரையும் சந்திக்கவுள்ளார்.

சுனாமி பேரலையால் பாதிக் கப்பட்ட இடங்களையும் அவர் பார்வையிடவுள்ளார். சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு மேற் கொள்ளும் சுற்றுப்பயணத்தின் அடிப்படையிலேயே அவரது இலங் கைக்கான விஜயமும் அமைந் துள்ளது.

கோபிஅனானுடன் அவரது மனைவி, ஐ.நா. அபிவிருத்தித் திட்ட நிர்வாகி மார்க் பிறவுண் ஆகி யோரும இலங்கை வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ந-7)

## குரங்குகள அட்டகாசம்

(தனங்கிளப்பு)

தென்மராட்சிப் பிரதேசத் தல் குறிப்பாக மட்டுவில், நுணா வில், சாவகச்சேரி ஆகிய பகு திகளில் குரங்குகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

குரங்குகள் தோட்டங்களில் உள்ள பயிர்களை நாசப்படுத்தி வருவதுடன் வீடுகளுககுள்ளும் புகுந்தும் அட்டகாசம் செய்துவரு வதாக மக்கள் கூறுகினறனர். (க-37)

## உதவி

தொண்டமனாறு சந்நிதி யான் ஆலய சூழலில் அமைந் திருக்கும் சந்நிதியான் ஆச் சிரமம் கடற் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக் கென 15 ஆயிரம் ரூபா பெறுமதி யான மருந்து வகைகளை வழங்கியுள்ளது.

ஆச்சிரமத்தின் நிர்வாக இயக்குநர் மோகனசாமி மந் திகை அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரியான சி. கதிர வேற்பிள்ளையிடம் மருந்துகளைக கையளித்துள்ளார். (க-35)

# அதிபர், ஆசிரியர்களுக்கான புதிய சம்பளப் பட்டியல் விபரம்

(யாழ்ப்பாணம்)

பொது நிர்வாக அமைச்சின் சுற்றிக்கைப்படி அதிபர், ஆசிரியர்கள் தற்பொழுது பெற்றுவரும் அடிப்படைச் சம்பளத்திற்கு நேரொத்த சம்பளப் படிநிலை உள்ளடங்கிய புதிய சம்பளம் 01.12.2004 இல் இருந்து பின்வருமாறு அமையும்.

30.11.2004 இல் பெற்ற சம்பளத்திற்கும் நேரொத்த புதிய சம்பளப் படிநிலைக்கும் இடையில் காணப்படும் மொத்தச் சம்பள அதிகரிப்பின் 50 வீதமோ அல்லது மாதம் 2500 ரூபாவோ எது கூடுத லாக இருக்கின்றதோ அத்தொகை 30.11.2004 இல் பெற்ற சம்பளத்துடன் சேர்க்கப்பட்டு 01.12.2004 இல் இருந்து வழங்கப்படும். மொத்த அதிகரிப்பின் மிகுதித் தொகை 01.01.2006 இல் வழங்கப் படும்.

உ+ம்:

**A.** அதிபர் தரம் 1 ஐச் சேர்ந்த திரு. சுப்பிரமணியத்திற்கு 09/2004 சுற்றுநிருபப்படி 01.12.2004 இல் சம்பளப்படி நிலை வருடம் 193920.00
30.11.2004 இல் பெற்ற சம்பளம் வருடம் 138480.00
மொத்த அதிகரிப்பு 55440.00
50% அதிகரிப்பு வருடம்-27720/= மாதம்-2310/=

மாதம் 2500 ரூபாவுக்குக் குறைந்த அதிகரிப்பாகையால் சுற்றிக்கையின்படி 01.12.2004 இல் பெற்றுவந்த சம்பளத்துடன் 2500 ரூபா வழங்கப்படும். மிகுதி அதிகரிப்பு (55440 - 30000) வருடம் 25440 மாதம்-2120 01.12.2006 இல் வழங்கப்படும்.

**B.** இ.அதிபர் தரம் 1 ஐச் சேர்ந்த திரு.வல்லிபுரத்திற்கு 09/2004 சுற்றுநிருபப்படி 01.12.2004 இல் சம்பளப்படி நிலை 259200.00
30.11.2004 இல் பெற்ற சம்பளம் 185040.00
மொத்த அதிகரிப்பு 74160.00
50% அதிகரிப்பு வருடம்-37080/= மாதம்-3090/=

50% அதிகரிப்பானது 2500/=இற்கு மேல் உள்ளதால் சுற்றிக்கைப்படி 01.12.2004 இல் பெற்று வந்த சம்பளத்துடன் 3 090/= அதிகரிப்பும் 01.01.2006 இல் 3090/= உம் வழங்கப்படும்.

01.12.2004ம் திகதிக்கு முன் வழங்கப்பட்ட படிகள் தொடர்ந்தும் வழங்கப்படவுள்ளன.

மேலும், பல விடயங்கள் இச்சுற்றிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. சுற்றிக்கை 10.2 இன்படி 01.12.2004 இன் பின் ஓய்வுபெறுபவர்களுக்கு ஓய்வுபெறும் திகதியில் ஓய்வூதியக் கணக்கிற்காக இச் சுற்றறிக் கையில் அதிகரிக்கப்பட்ட முழுத்தொகையையும் சேர்த்துக் கணக்கிடப்படவேண்டும். (ந)

# அதிபர், ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல்கள்

## திகதிகளில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

கடல் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைப்பு விடயமாக அதிபர்கள், ஆசிரியர்களுடன், வலயரீதி யாகவும், கோட்டரீதியாகவும் நடாத்தப்படும் சந்திப்புக்களின் திகதி குறித்து சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

எனவே இவ் அறிவித்தலைக் கவனத்திற் கொண்டு செயற் படுமாறு சகல அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் கேட் டுள்ளார்.

மாற்றம் செய்யப்பட்ட சந்திப்புக்களின் (திகதி) காலம் இடம் கலந்து கொள்ளவேண்டப்படுவோர் விபரம் வருமாறு.

| காலம் | இடம் | கலந்துகொள்ள வேண்டப்படுவோர் |
|---|---|---|
| 05.01.2005 மு.ப. 10.00 | யா/ இராமநாதன் மகளிர் கல்லூரி | வலிகாமக் கல்வி வலய அதிபர்கள் |
| 06.01.2005 மு.ப. 10.00 | யா/நெல்லியடி ம.வி. | வடமராட்சி வலய அதிபர் ஆசிரியர்கள் |
| 06.01.2005 மு.ப. 10.00 | யா/திருக் குடும்பக்கன்னியர் மடம் | யாழ். கோட்ட அதிபர் ஆசிரியர்கள் |
| 06.01.2005 பி.ப. 2.00 | யா/இந்து மகளிர்கல்லூரி | நல்லூர்க் கோட்ட அதிபர் ஆசிரியர்கள் |
| 06.01.2005 பி.ப. 2.00 | யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி | தென்மராட்சிக் கோட்ட அதிபர் ஆசிர்யர்கள் |
| 07.01.2005 மு.ப. 9.00 | யா/இராம நாதன் கல்லூரி | உடுவில் கோட்ட அதிபர் ஆசிரியர்கள் |
| 07.01.2005 மு.ப. 11.00 | யா/மல்லாகம் மகாவித்தியாலயம் | தெல்லிப்பளை கோட்ட அதிபர் ஆசிரியர்கள் |
| 07.01.2005 மதியம் 12.00 | யா/நெடுந்தீவு மகா வித்தியாலயம் | நெடுந்தீவு கோட்ட அதிபர் ஆசிரியர்கள் |
| 07.01.2005 பி.ப. 1.00 | யா/சண்டிலிப் பாய் இந்துக் கல்லூரி | சண்டிலிப்பாய் கோட்ட அதிபர் ஆசிரியர்கள் |
| 07.01.2005 பி.ப. 3.00 | யா/ வட்டுக் கோட்டை இந் துக் கல்லூரி | சங்கானைக் கோட்ட அதிபர் ஆசிர்யர்கள் |
| 08.01.2005 மு.ப. 10.00 | யா/ வேலணை சரஸ்வதி மகா வித்தியாலயம் | வேலணை ஊர்காவற்றுறை கோட்ட அதிபர் ஆசிரியர்கள் |

(க)





வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கம் குடத்தனை பொற்பதி முகாமிலுள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு அண்மையில் உலர் உணவு, மருந்து மற்றும் உடுபுடைவை கள் வழங்கியது.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினா மாவை சேனாதிராஜா மற்றும் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி உட்பட மற்றும் பல ரையும் படங்களில் காணலாம்.

படங்கள்: வட்டுக்கோட்டை செய்தியாளர்

## இன்று ஒரு தகவல்

# எனக்குள் நான்

ஒரு பெரியவர் என்னைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார். நீ ஒரு ஆளா? இரண்டு ஆளா? என்றார். இப்படிக் கேட்டதும் அந்தப் பெரியவர் மீதே எனக்கு சந்தேகம் வந்து விட்டது. அவர் இப் போது நிதானத்திலிருக கிறாரா? இல்லையா? என்று பார்க்கின்ற எல்லாம இரண்டிரண்டாகத் தெரிந்தால் அது சந்தேகத்திற்குரிய விடயம் தானே? அதனால் சந்தேகபட்டேன். இருந்தாலும் பெரியவர் மீண்டும் கேட்டார். ''நீ ஒருத் தனா? இரணண்டு பேரா? என்று. "நான் ஒரு ஆள் தான்'' என்றேன். ''இல்லை! இப்படித் தான் நாம் எல்லோரும் நினைத்துக் கொண்டிருக்கின்றோம் ஆனால் நம் ஒவ்வொருவருக்குள்ளும் மூன்று பேர் இருக்கிறோம் என்றார்.

தலையைப் பிய்த்துக்கொள்ளலாம் போல இருந்தது. இருந்தாலும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் ''எப்படி அது?''என்றேன்.''நம்மைப் பற்றி நாம் நினைத்துக்கொண்டிருக்கிறோமே. அது ஒரு விதம் .நம்மைப பற்றி அடுத்தவர்கள் நினைக்கிறார்களே அது ஒரு விதம்.நம்மைப் பற்றி நமக்கும் தெரியாமல் அடுத்தவர்களுக்கும் தெரியாமல் இருப்பது ஒரு விதம்.

இதைப்பற்றி விபரமாகச் சொல்வதானால் என் னைப் பற்றி நான் எப்படி நினைத்துக் கொண்டிருக் கிறேனோ அது ஒரு மனிதன். என்னைப் பற்றி நீங்கள் என்னை நினைக்கிறீர்களோ அது ஒரு மனிதன். இதைத் தவிர எனக்கும் தெரியாமல் உங்களுக்கும் தெரியமால் எனக்குள் ஒரு மனிதன் இருக்கிறான்.ஆக ஒவ்வொருவருக்குள்ளும் மூன்று மனிதன் இருக்கிறான் என்பது அவரது விளக்கம்.

இது ஒரு பக்கம் இருக்கட்டும் இன்னொரு பெரிய வர் என்ன சொல்கிறார் என்றால் நம்மைப் பற்றியே நமக்குத தெரியாத உண்மைகள் நான்கு விதம். ஒன்று நமக்கும் தெரியும் மற்றவர்களுக்கும் தெரி யும். இரண்டு நமக்குத் தெரியும் மற்றவர்களுக்குத தெரியாது.மூன்று நமக்குத் தெரியாது மற்றவர் களுக்குத் தெரியும். நான்கு நமக்கும் தெரியாது மற்றவர்களுக்கும் தெரியாது. இதை நன்கு புரிந்து கொண்டால் கருத்து வேறுபாடு வராது. மனித நேயம் வளரும்.

முதல் விடயத்தை எடுத்துக் கொள்வோம். நமக்கும் தெரியும் அடுத்தவர்களுக்கும் தெரியும். உதாரணத்துக்கு நான் சிறிது குள்ளம் என்று வைத்துக் கொள்ளுங்கள். இது நமக்கும் தெரியும் அடுத்தவர்களுக்கும் தெரியும். இரண்டு பேருக்கும் தெரிந்த உண்மை இது. அதனால் என்னைப் பற்றி யாராவது "அந்த ஆள் அவ்வளவு உயரம் கிடையாது'' என்று கூறினால் அதைத் தப்பாக எடுத்துக் கொள்ளக்கூடாது.

இரணடாவது விஷயம் நமக்குத் தெரியும் அடுத்தவர்களுககுத் தெரியாது. ஒருவருக்குப் பரிசு கிடைக்கிறது அதைப் பார்த்து நான் பொறாமைப் படுகிறேன். இருந்தாலும் அதை வெளியே காட்டிக்கொள்ளாமல் முகத்தில் சிரிப்பை வரவ ழைத்துக் கொண்டு அவரைப் பாராட்டுகிறேன். இது எனக்குத் தெரியும்அடுத்தவர்களுக்குத் தெரியாது. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவது இந்த ரகம்.

மூனறாவது விஷயம் நமக்குத் தெரியாது மற்றவா களுககுத் தெரியும். கோபப்படுவது இதற்கு ஓர் உதாரணம். நமக்குத் தெரியாத ஒரு குறையை அடுத்தவர்கள் சுட்டிக்காட்டும் போது நமக்குக் கோபம் வரும்.

நான்காவது விஷயம் நமக்கும் தெரியாது மற்றவர்களுக்கும் தெரியாது. ஒருவன் எரிந்து விழுகிறான் அவனுக்கு இரத்த அழுத்தம் அதனால் அப்படி நடக்கிறான் .அவனுக்கு இரத்த அழுத்தம் இருப்பது அவனுக்கும் தெரியாது அடுத் தவனுக்கும் தெரியாது. அதனால் அவனும் பதிலுக்கு இவன் மேல் கோபப் படுகிறான்.

அதனால நாம் மனித நேயத்துடன் வாழ வேண்டுமானால் நம்மைப் புரிந்து கொள்ளவேண்டும். அடுத தவர்களையும் புரிந்து கொள்ள வேண்டும். பகுத்து அறிய வேண்டும். அது தான் பகுத்தறிவு.

இந்தத் தகவலைக் கேட்டுவிட்டு நமது ஆள் ஒருவன் சொன்னான் .''நீங்கள் சொல்வதெல்லாம் சரி தான் சார். அந்த நான்காவது விஷயம் சொன்னீர்களே அதைச் சரியாகப் புரிந்து கொள்ளாததனால் தான் எனக்கும் என் நண்ப்னுக்கும் நேற்று சண்டைவந்தது ''என்றான். ''என்ன விஷயம்?'' என்று கேட்டேன். ''ஒரு நூறு ரூபா பணம் அதை யார் எடுப்பது என்பதில் எங்களுக்குள் தகராறு'' என்றான் "இதில் என்ன தகராறு பணம் யாருடையதோ அவர்கள் எடுக்க வேண்டி யது தானே'' என்றேன்.''அது யாருடையது என்பது எனக்கும தெரியாது அவனுக்கும் தெரியாது. அதனால் தான் சார் தகராறே'' என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ''சுனாமி'' யால் நாடளாவிய ரீதியில்

# 8,50201 பேர் இடம்பெயர்ந்துள்ளனர் 792 முகாம்களில் இவர்கள் தங்க வைப்பு

(கொழும்பு)

கடல்கொந்தளிப்பினால் உயிரிழந்தவர்களின் தொகை 30ஆயிரத்து196 ஆக அதிகரித்துள்ளது என அனர்த்த முகாமைததுவ செயலகம் அறிவித்துள்ளது.

அம்பாறையில் 10ஆயிரத்து 436 பேரும் அம்பாந்தோட்டையில் 4ஆயிரத்து 500பேரும் காலியில் 4ஆயிரத்து 101பேரும் முல்லைத் தீவில் 3ஆயிரம் பேரும், யாழ்ப்பாணத்தில் 2ஆயிரத்து 640 பேரும், மாத்தளையில் ஆயிரத்து 205 பேரும். திருகோணமலையில் 957 பேரும்; கிளிநோச்சியில் 560 பேரும், களுத்துறையில் 213 பேரும், கொழும்பில் 76பேரும், கம்பஹாவில் 7பேரும், புத்தளத்தில் 4 பேரும் இவ் அனர்த்தத்தினால் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, 2இலட்சத்து 15 ஆயிரத்து 413 குடும்பங்களைச் சேர்ந்த 8இலட்சத்து 50 ஆயிரத்து 201 பேர் இடம் பெயர்ந்துள்ளனா. அவ்வாறு. இடம் பெயாந்தவர்கள் 792முகாம்களில தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

காலியில் 183 முகாம்களும், அம்பாறையில் 25 முகாம்களும், மாட்டக்களப்பில் 100 முகாம்களும், களுத்துறையில் 92 முகாம்களும் திருகோணமலையில் 76 முகாம்களும் யாழ்ப்பாணம், கொழும்பு ஆகியவற்றில் தலா 43 முகாம்களும்; மாத்தறையில் 52 முகாம்களும் முல்லைத்தீவில் 19 முகாம்களும் கிளிநொச்சியில் 12 முகாம்களும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ற-8)

# சுனாமியின் தாக்கத்திலிருந்து இலங்கை இந்திய நாட்டைக் காப்பாற்றிவிட்டது

## தமிழ்நாட்டு மக்கள் நம்பிக்கையென அஸ்வர் தெரிவிப்பு

(கொழும்பு)

கடுமையான சுனாமித்தாக்கத்திலிருந்து இலங்கை தமது நாட்டைக் காப்பாற்றிவிட்டதாக இந்திய தமிழ் நாட்டு மக்கள் நம்புகின்றனர்.

இலங்கை கடல் அலைகளைத் தடுத்து இந்தியாவின் தெற்குப்பிரதேசத்தை காப்பாற்றிவிட்டதாக விஞ்ஞானிகளும புவியியலாளர்களும் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் அமைச்சர் ஏ.எச.எம். அஸ்வர் தனது நததார் விடுமுறைக்காக இந்தியா சென்றிருந்த சமயமே இப்பாரிய அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

இச சமயத்திலேயே மேற்படி அபிப்பிராயம் அங்குளள மக்களிடம் நிலவுவதாக அஸ்வர் சண்டேலீடருக்குத் தெரிவித்துளளார்.

மேலும் இந்திய மக்கள் இலங்கை தம்மைக் காப்பாறறி விட்டதாகக் கூறி தமது கடவுள்களுக்கு நன்றி செலுத்துகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

அஸ்வர் அந்தமான் மற்றும் மலபார் கரையோரங்களுககுச் சென்று பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப பார்வையிட்டுள்ளார்.

இது பற்றி அவர் தெரிவிக்கையில், பாதிக்கபபட்ட தமது மக்களுக்கு இந்திய அரசின் ஆபத்து முகாமைத்துவமானது போதுமான உதவிகளை உடனடியாகவே வழங்கியுள்ளது.

மத்திய அரசுடன் இணைந்து கைகோர்த்து சகலரும ஒனறாக இதனை மேற்கொண்டதை பார்த்து தான் அதிர்ச்சியடைந்து விட்டேன. எமது நாடு பாதிக்கப்பட்டவாகளுக்கு என்ன செயவது என இன்னமும் தீர்மானம் எடுத்தே முடியவில்லை என்பதே எனது அதிர்ச்சிக்குக் காரணமாகும் எனக் குறிப்பிட்டார்.

(ற-6)

# இராசி பலன்

**05.01.2005** (மார்கழி 21 புதன்கிழமை)

தசமி பின்னிரவு 4.38 மணிவரை

சுவாதி பின்னிரவு 1.38 மணிவரை

இராகுகாலம் 12.31 - 2.01 மணிவரை

சுபநேரம் 5.01 - 6.31 மணிவரை

**மேடம்** மனோ தைரியம், எடுத்த கருமங்கள் கைகூடும், போசன சுகம், மாதர் நட்பு.

**இடபம்** மன மகிழ்ச்சி, தடைப்பட்ட காரியம் கைகூடும், சத்துரு ஜெயம், நல்ல விருமானம்.

**மிதுனம்** தாழ்ந்த நிலை, அஜீரண ரோகம், காரிய இடையூறு, போசன சுகக்குறைவு.

**கடகம்** தன விரயம், புத்தி சஞ்சலம், ரோக நிலை, முயற்சி தாமதம்.

**சிங்கம்** புதிய பொருள் சேர்க்கை, நற்கீர்த்தி, மனோதைரியம், முயற்சி கைகூடும்.

**கன்னி** கௌரவக் குறைவு, எடுத்த கருமங் கள் தாமதமாகும், பண விரயம், விவாதம்.

**துலாம்** புதிய முயற்சி, களஸ்திர சுகம், வெகுமானம், பிரயாணம்.

**விருச்சிகம்** சிந்தனை மகுதி, நித்திரைக் குழப்பம், பிறருக்கு உதவுதல், தன விரயம்.

**தனுசு** குடும்ப சுகம், நண்பர்கள் உதவி, எடுத்த கருமங்கள் கைகூடும், நல்ல வருமானம்.

**மகரம்** அதிகாரம், எடுத்த காரியம்கை கூடும், நன்கொடை, போசன சுகம்.

**கும்பம்** உத்தியோக பலிதம், வயிற்று வலி, எதிர்பாராத செலவு, பொருள் சேதம்.

**மீனம்** பொருள் விரயம், முழங்கால் வலி, கல கம், முயற்சி தாமதம்.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது - வளவன்

# யுனிசெப் பிரதிநிதி புலிகளுக்கு பாராட்டு

(கிளிநொச்சி)

நிலைமையின் தாற்பரியமுணர்ந்து மக்களை பாதுகாப்பான இடங்களிற்கு அகற்றியதோடு அவரின் தேவைகருதி உரிய சேவை வழங்கியதன் மூலம் புலிகள் பல உயிர்களைக காப்பாற்றியுள்ளார்கள் என யுனிசெப்பின் தலைமை இயக்குநர் திருவாட்டி கரோல் பெலாமி பாராட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் வன்னிக்குச் சென்ற அவர் அங்கு நிலைமைகளை ஆராய்ந்த பின்னா கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

முல்லைத்தீவுக்கு விஜயம் செய்த அவர் அங்கு சேதங்களைப் பார்வையிட்டதுடன் சிறுவர்களுக்கான மனிதாபிமான உதவிகளை வழங்குவது தொடர்பாக ஆராய்ந்தாா. அகதிமுகாம்கள் மற்றும் அவசர நிவாரணப பணிமனை போன்றவற்றையும் பார்வையிட்டார்.

பின்னர் தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பொறுப்பாளர் ரெஜி, அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் ஆகியோரைச் சந்தித்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேற்கொளள வேண்டிய உதவிகள் குறித்தும் ஆராய்ந்தார்.

(ச)

# உணவுப் பொதி வழங்கல்

(மருதங்கேணி)

கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து வாழும் மக்களுக்கென சந்நிதியான் ஆச்சிரமம் 500 உணவுப் பொதிகளை வழங்கி வருகின்றது.

இவ் உணவுப் பொதிகள் ஒவ்வொரு நாளும் சந்நிதியான் ஆச்சிரமத்திலிருந்து எடுத்துவரப்பட்டு இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இப் பணி தொடர்ந்தும் இடம்பெறும் என சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் தெரிவித்தார்.

(க-35)

# துயரம் தந்த 2004

## ஜூன்


வலம்புரி நினைவுக்குறிப்பு

01.06.2004 * இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மீளாய்வு மாநாடு பெல்ஜியத்தின் தலைநகர் பிரசல்ஸில் நடைபெற்றது.

* யாழ். குடாநாட்டில் குற்றச்செயல்கள் அதிகரிப்பது குறித்து யாழ். செயலகக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.


02.06.2004 * ஊடகவியலாளர் நடேசனின் கொலையைக் கண்டித்து யாழ்.குடாநாட்டில் ஹர்த்தால். மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலும் ஹர்த்தால் அனுஷ்டிப்பு.

* இயல்புநிலையை உருவாக்குவது குறித்து மட்டக்களப்பில் புலிகள் - படையினர் சந்திப்பு.




05.06.2004 * தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு.

07.06.2004 * மல்வத்த மகாநாயக்கர் ரம்புக்வெல ஸ்ரீவிபஸி தேரர் காலமானார்.



08.06.2004 * வெள்ளிக்கிரகம் பூமிக்கும் சூரியனுக்குமிடையில் நேர்கோட்டில் கடந்துசென்ற நிகழ்வு 122ஆண்டுகளின் பின் நடைபெற்றது.



08.06.2004 * பாராளுமன்றத்தினுள் இரண்டு பிக்குகள் தாக்கப்பட்டனர். செங்கோல் மறைத்துவைக்கப்பட்டு ஆர்ப்பாட்டம்.



09.06.2004 *ஊடகவியலாளர் கி.நடேசனின் கொலையைக் கண்டித்து கொழும்பில் ஆர்ப்பாட்டம். திருமலையில் ஹர்த்தால்.

10.06.2004 *தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் ஜனாதிபதியுடன் சந்திப்பு.



11.06.2004 *அமெரிக்க இராணுவ பசுபிக் பிராந்திய கட்டளைத் தளபதி ஜேம்ஸ் எம்.கம்பெல் பலாலிக்கு வருகை.



16.06.2004 *நோர்வே தரப்பினர் புலிகளுடன் சந்திப்பு.

*வளிமண்டல திணைக்கள பணிப்பாளர் ரூபசிங்க யாழ்.வருகை.




23.06.2004 * போலி ஆவணங்கள் தயாரித்த 'மினி கச்சேரி' அரியாலையில் முற்றுகையிடப்பட்டது.



24.06.2004 *யாழ்.குடாநாட்டில் மிதிவெடி அகற்றும் ஹலோ ரஸ்ட் நிறுவனத்தின் வாகனங்கள் தீயிடப்பட்டன.

27.06.2004 *நாடாளுமன்ற அமளிதுமளிகளைக் கண்டித்து ஹெல உறுமயவின் தர்மராஜ்ய யாத்திரை ஆரம்பம்.



28.06.2004 *கிளிநொச்சியில் கண்காணிப்புக்குழுத் தலைவர் ரொன்பியூறு ஹொவ்டே சு.ப.தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு.



30.06.2004 *எரிக்சொல்ஹெய்ம் கிளிநொச்சி பயணம்.

## உலக அரங்கில்



05.06.2004 *அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி றொனால்ட் றீகன் காலமானார்.

08.06.2004 *இந்தோனேஷியாவின் சாங்கிதே தீவில் எரிமலை குமுறியதால் 16ஆயிரம் பேர் இடம்பெயர்வு.

12.06.2004 *ஈராக்கின் இடைக்கால நிர்வாக அமைச்சரான பஸ்லம் கவ்பா சுட்டுக்கொலை.



26.06.2004 *பாகிஸ்தான் பிரதமர் ஜபருல்லா கான் ஜமாலி இராஜினாமா.

28.06.2004 *ஈராக்கிடம் இடைக்கால அரசு கையளிக்கப்பட்டது.

(தொடரும்...)

# தமிழின விடுதலைக்காகத் தன்னுயிர் ஈந்த தலைவன் அமரர் குமார் பொன்னம்பலம்

மாமனிதர் குமார் பொன்னம பலத்துடன் பல வருடங்களாக



தொடர்புடையவனாய் செயற் படடுவந்த முறையில் அவரைப் பற்றி பல விடயங்களை ஏற் கனவே பத்திரிகைகளிலும் நினைவு மலர்களிலும் வெளிப் படுத்தியுள்ளேன். ஆகையால் இனறைய தினத்தில் அவரைப் பற்றி மற்றவர்கள் எழுதியதை யும் கூறியதையும் வெளிப்ப டுததுவது அவருக்கு நான் செய் யும் கடமையாகும்.

**அமரர்**

**குமார் பொன்னம்பலததின் மறைவின் நினைவு**

"யாழ்.மக்களின் அரசியல் வரலாற்றில் முக்கிய திலகமாக விளங்கியவர் ஜி.ஜி.என அன் பாக அழைககப்பட்ட அமரா பொன்னம்பலம் ஆவா. அவ ருடைய மகனாகிய குமார் பொன் னம்பலம் தமிழீழ மக்களின் தற்கால அரசியல் முக்கியஸ் தராக விளங்கினார். அவர் கொழும்பு தலைநகரில் வாழ்ந் தாலும் தமிழ் மக்களின் நலன் களில் எப்போதும் அக்கறை கொண்டவராக, அவர்களின் விடியலுக்காக துணிந்து குரல் கொடுத்து வந்தார். இவரது அகால மரணம் ஈடுசெய்ய முடி யாத இழப்பாக இருக்கிறது.

**மேதகு தோமஸ் சவுந் தரநாயகம் ஆண்டகை**
**யாழ். ஆயர்**

**தமிழ் தேசியத்தின் வீரமகன்**

நான் ஒரு கிறிஸ்தவனாக இருக்கட்டும். குமார் ஒரு இந் துவாக இருக்கட்டும். ஆனால் ஆண்டவரே நீரே வாழ்வின் தனித் துவமான மூலத் தோற்றுவாயா கவும் உச்ச நிலையாகவும் இருக்கிறீர்.

**சுட்டுக்கொல்லப்பட்ட மாமனிதர் குமார் பொன் னம்பலத்தின் ஐந்தாவது நினைவுதினத்தை யொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

குமாரின் வாழ்வின் நீளமும் அகலமும் ஆண்டவரே உம்முன் அவரது வாழ்வின் ஆழத்தைப் பிரதிபலிபபன அல்லவோ? உண் மைககும் நீதிக்குமாகச் சேவை யாற்ற எத்துணை ஆழமான மற்றுறுதியை அவர் கொண்டி ருந்தார். அந்நீதிக்குப் பலியா குபவர்களின் பாதுகாப்புக்காக குமார் தனது கல்விச் செல் வத்தையும் ஆளுமையையும் துணிவாகவும் புத்திசாதுரிய மாகவும் இருக்கின்றீர். குமார் உம்முடன் இருக்கின்றார். குமா ரின் பற்றுறுதி, அவரது வாழ் வின் உறுதிக்கான ஒவ்வொரு நகாவுகளிலும் ஊடறுத்து வியா பித்து அவரது சொற்கள் உண் மைக்கும் நீதிக்குமான இமா லய உணர்ச்சிகளுக்குப் பிறப் புகொடுத்தன. தமிழர்களாகிய எமக்கு நீதியைப் பெற்றுத்தர வேண்டும் என்ற குமாரின் பேர வாவும் உணர்ச்சியுமன்றோ உலகெங்கும் பரநது வாழும் தமிழர்களுடைய இதயங்களைத தொட்டுச் சென்றது.

**அருட்தந்தை**
**எஸ்.கே.இம்மானுவல்**
**ஜேர்மனி.**

**உள்ளதை உள்ளவாறு கூறுவது குமாரிடமுள்ள உறுதியான சிறப்பம்சமாகும**

குமாரின் உறுதியான சிறப் பம்சம் உள்ளதை உள்ளவாறே வெளிப்படையாகக் கூறும் தன்மை யாகும் (**His forte was calling a spade**). அவா இதளவு எதுவித பயமோ தயக்கமோ இன்றி சரி யெனத் தான் உணர்நததை வெளிப படுத்தும் இயல்பு கொண்டவர்.

குமார் ஒருபொழுதும் சுய நலனுக்காகத் தனது சிந்தனை யின் வெளிப்பாட்டினை வார்த்தை ஜாலங்களால் மூடி மறைத்த டவர். குமார் ஒருபொழுதும் சுயநலனுக்காகத் தனது சிந் தனையின் வெளிப்பாட்டினை வார்த்தை யாலங்களால் மூடி மறைத்தவர் அல்ல.

பலர் மனித உரிமைபற்றி பேச்சோடு மட்டும் காலம் போக் குகையில் பாதிக்கப்பட்டவர்களின் பாதிப்பை, இழப்பை, துயரத்தை தன் செயலால் எடுத்துக்காட்டி அவர்களுக்கான நிவாரணத்தின் தேவையை வலியுறததி நிற்பது இவருடைய தனிப் பண்பு.

சுற்றிவளைத்துப் பேசாத உண்மையான மனிதாபிமானம் படைத்த ஒருவரை, அவரது

***அ.விநாயகமூர்த்தி***
***தலைவா***
***அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்***

குரலை நிரந்தரமாக நிஷப்த மாக்கும் நோக்குடன் பட்டப்ப கலில் சுட்டுக்கொன்றமை மிக மிக துரதிஷ்டவசமானதே.

**சி.வி.விக்கினேஸ்வரன்**
**உயர் நீதிமன்ற நீதியரசர்**

மேலே கூறியவற்றிலிருந்து மாமனிதர் குமார் நாட்டுப் பற் றும் தமிழ் பற்றுமுடையவராய் தமிழத் தேசிய இனத்தின் விடு தலைக்காக தன்னுயிரைத் தியாகம் செய்தார் என்பதை தமிழ்த் தேசிய இனம் என்றும் மறக்காது. அவரின் நினைவும் சாதனையும் என்றும் நிலைத்து நிறகும் என்பதில் ஐயமில்லை.

# சொந்த இட முகாம்களுக்கு செல்லும் பாதிப்புற்றோர்

(துன்னாலை)

இயற்கை அன்னையின் சீற்றததால் பாதிக்கப்பட்டு அகதி முகாம்களில் தங்கியுள்ள வடமராட்சி மக்களில் பலர் தமது சொந்த இடங்களுக்கு அண்மித்துள்ள முகாம்களுக்கு சுய விருப்பின் பேரில் இடம்மாறுவதைக் காணமுடிகிறது.

கடற்றொழில் செய்பவர்கள் எஞ்சியுள்ள தமது தொழிலுக் கான உபகரணங்களைப் பாதுகாக்கும் நோக்கிலும் மீளக் குடியேறுவதற்கான வழிமுறைகளை ஆராயும் நோக்கிலுமே இவ்வாறு செல்கின்றனர்.

இவ்வாறு இடம்மாறி செல்பவர்களுக்கான போக்குவரத்து வசதிகளை அவர்கள் தங்கியுள்ள முகாம்களுக்கு பொறுப்பாக உள்ளவர்களே செய்து கொடுபபதாகவும் தெரியவருகிறது. அத் துடன். பாடசாலைகளில் முகாம்கள் இருப்பதால் கல்விச் செயற பாட்டிற்கு அவை தடையாக அமையும் என்பதாலும் மக்கள் இடம்மாறுவது குறிப்பிடத்தக்கது. (சு-101)


**மாமனிதர் குமார் பொன்னம்பலம்**
**அவர்களது**
**5ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



**மாமனிதர் குமார் பொன்னம்பலம் தமிழ் உலகிற்காய் தனது உயிரைத் தற்கொடையாக தந்து 5 ஆண்டுகள் நிறை வுறுகின்றன. தமிழீழத் தேசியக் கனவோடு பயணித்த அவரது கனவுகள் இன்று நிறைவேறுகின்ற இந்த வேளையிலே அன்னாரது நினைவு நாளில் இலட்சிய மனிதனது தியாகத்தை நினைவு கூர்வோமாக.**

இன்று (05.01.2005) நடைபெற இருந்த நினைவு நிகழ்வுகள் நாட்டில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக நடைபெறமாட்டாதென்பதையும் அறியத்தருகிறோம்.

**மாமனிதர் குமார் பொன்னம்பலம்**
**ஞாபகார்த்தக் குழு**

(C/942)


# நிவாரணப் பணி 98 வீதம் பூர்த்தி

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு பகுதிக் கான நிவாரணங்களில 98வீத மான பொருட்கள் வழங்கப்படடு விட்டாதாக வடமராட்சி கிழக்கு புதுக்காட்டு சந்தியில் இயங் கும் செயலக குழு அலுவல கத்தில் இடம்பெற்ற செயல ணிக் கூட்டத்தில் தெரிவிக்கப் பட்டது.

இக் கூட்டம் கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறை பொறுப் பாளர் கலைவாணன் தலை மையில் அண்மையில் நடை பெற்றது.

இப் பகுதியில் பாதிக்கப் பட்ட மக்களின் கணக்கெடுபபு நடைபெற்று வருவதாகவும் தெரி விக்கப்பட்டது.

இதேவேளை, இக் கடல் அனர்த்தங்களால் பாதிக்கப் பட்டு இருக்கும் மக்களிடம் நிறுவனங்கள் தனித்தனியாகச் சென்று விபரங்களை சேகரிக் காது, புதுக்காட்டு சந்தியில் அமைக்கப்பட்ட செயலணி அலு வலகத்தில் (புள்ளிவிபரங்களை) பெறுமாறு நிறுவனங்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட் டுள்ளது. (க-35)

# சட்டவிரோத மணல் அகழ்வு

(தனங்கிளப்பு)

தென்மராட்சியின் தெற்கு பகுதிகளான வேலம்பராய், நாவற குழி, தச்சந்தோப்பு ஆகிய பகுதி களில இரவு நேரங்களில் சட்ட விரோதமான முறையில் மண் அகழப்பட்டு வருவதாக இப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் கடல்நீா குடிமனை களை அழிக்கும் சூழ்நிலை காணப்படுவதாக அப்பகுதி மக் கள் அஞ்சுகின்றனர். எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இதனை கட்டுப்படுத்த வேண்டும் என மக்கள் கேட்டுக்கொண்டுள்ள னர். (க-37)

# கடல் கொந்தளிப்பினால் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 271 பாடசாலைகள் சேதம்

(மருதங்கேணி)

வடக்கு-கிழக்கு மாகாணத் தில் அண்மையில் இடம்பெற்ற கடல் கொநதளிப்பினால் கடற கரையோரங்களில் உளள 271 பாடசாலைகள் அழிந்தும் சேத மடைந்துமுள்ளதாகவும் புதிய கல்வி ஆண்டு ஆரம்பிக்கமுன் அவற்றை புனரமைக்கவும் திருத்தவும் 135.5 மில்லியன் ரூபா தேவைப்படும் எனவும் வடககு-கிழக்கு மாகண கல்வி அமைச்சின் செயலாளா இ.தியாக லிங்கம் தெரிவித்துள்ளார்.

கடல் அனர்த்தங்களால் பாதிக் கப்பட்ட விபரங்கள் சேகரிப் பதறகான அவசரகூட்டம் அண் மையில் இடம்பெற்றது.

இக் கூட்டத்தில் கல்வி துறைக்கு ஏற்பட்ட பாதிப்புகளை நேரில் சென்று ஆய்வு நடத் துவதற்கென கல்வி அதிகாரி கள் கொண்ட ஆறு குழுக்கள் நியமிக்கப்பட்டன.

இக் குழுக்கள் ஊடாக யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன் னார், கல்முனை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட் டங்களில் கடல் பெருக்கினால் உயிரிழந்த மாணவர்கள், ஆசி ரியர்கள், அதிபர்கள், கல்வி சார் ஊழியர்கள் எண ணிக்கைகள் சேகரிக்கப்படவுள் ளது.

அத்துடன் அழிவுற்ற பாட சாலைகள் கல்வி அலுவலகங் கள், கல்விசார் விடுதிகள் வாகனங்கள் மற்றும் சீருடை கள், பாடப்புத்தகங்கள் ஆகிய வற்றை இழந்த மாணவர்களின் விபரமும் இக்குழுக்களால் திரட டப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. (க-35)

# இயற்கை அனர்த்தங்கள் குறித்த முன்னெச்சரிக்கைகள் அவசியம்

**பேராசிரியர் விமல் திஸநாயக்க வலியுறுத்து**

(கொழும்பு)

இயற்கை அனர்த்தங்கள் தொடர்பாக முன்னெச்சரிககை விடுப்பதற்கென தேசிய அனர்தத முகாமைத்துவ தகவல் கொள்கை ஒன்றின் அவசியத்தை ஹவாய் பல்கலைக்கழக பேராசிரியா விமல் திஸநாயக்க வலியுறுத் தியுள்ளார்.

இலங்கையைப் பொறுத்த வரை இது ஒரு சவாலாக அமைந் திருந்தாலும், அனர்த்தங்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டவும், ஒன்றிணைக்கவும், ஏனைய நாடுகளுடன் அவற் றைப் பகிர்ந்துகொள்ளவும் இத்தகைய நிலையம் அவசி யம்.

இவ்வாறான இயற்கை அனர்த தத்தால் ஏற்படக்கூடிய சேதங் களை இதன் மூலம் குறைத் துககொள்ளலாம் என்றும் பேரா சிரியர் விமல் திஸநாயக்க கூறி யுள்ளார். (ந-7)

## மீள் பார்வை

# யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும்

வேலணை பண்டிதர் பொ.ஜெகந்நாதன்

28

இந் நூலில் இவர்கள் மேலும் சொல்லும் இப்பகுதியின் தமிழாக்கமாவது சிங்கைநகர் அல்லது சிங்கபுரம் யாழ்ப்பணத்தின் கிழக்குக் கரையிலே வல்லிபுரத்திலே கட்டப்பட்டதென்பது மிகத் தெளிவு. ஆரியச்சக்கரவர்த்திகளுக்குப் பிறகுதான் அது பிரபல்யம் அடைந்தது. உக்கிரசிங்கன் தன் தலைநகரைக் கதிரைமலையில் இருந்து சிங்கை நகர்க்கு மாற்றினான். சில விற்பனனர்கள நல்லூர்தான் அச்சிங்கைநகர் என்று சொல்லத் தெண்டிக்கிறார்கள். ஆனால் கொர்தகமத்துச் சாசனத்தால் அசசிங்கைநகர் அலையெறிந்து சப்திக்கும் ஆழியின் அருகே அமைந்துள்ள ஒரு பட்டினம் என்று அறியலாம். நல்லூர்தான் அது பிரபல்யம் அடைந்தது. உக்கிரசிங்கன் தன் தலைநகரைக் கதிரைமலையில் இருந்து சிங்கை நகர்க்கு மாற்றினான். சிலவிற்பனர்கள் நல்லூர்தான் அச்சிங்கைநகர் என்று சொல்லத் தெண்டிக்கிறார்கள். ஆனால் கொத்தகமத்துச் சாசனத்தால் அச்சிங்கை நகர் அலையெறிந்து சப்திக்கும் ஆழியின் அருகே அமைந்துள்ள ஒரு பட்டினம் என்று அறியலாம். நல்லூர் ஒருவாவிக்கரையிற் கூடவில்லை. உக்கிரசிங்கன் கதிரைமலையில் இருந்து தன் தலைநகரைச் சிங்கைநகர்க்கு மாற்றியுள்ளான். ஆதலால் அது நல்லூரின் வேறான உள்ள ஒரு துறைமுகமாகவும் ஒருவேளை இருந்திருக்கலாம். (A.J.P. 310 .311 என்பது அன்றியுமிவர்கள் அந்நகர் சிங்கைநகர்) யாழ்ப்பாணத்தின் இராசதானியாய் வந்த பின் சிங்கைநகர் என்னும் பெயரால் அழைக்கப்பட்டது. இப்பெருநகர் அழிந்து மணலால் மூடப்பட்டிருக்குமிடத்தைப் பருத்தித்துறைக்குத் தெற்கே வல்லிபுரக்கோயிலுக்கண்மையில் இன்றுங் காணலாம். (யா.ச. பக் 10) என்றுங் கூறியுள்ளார் வணசுவாமி ஞானப்பிரகாசர் அவர்களும் முதலியார் சிங்கை நகரைப்பற்றிக் கூறிய கூற்றை அப்படியே ஒப்புக் கொண்டவர்களாய் இவ்வுயிற் பத்திமானின் (திரு. முதலியாரின்) அனுபானப்படி பருத்தித்துறைக் கணித்தாய் மனல் மேடுகள் பொருந்தியிருக்கின்ற வல்லிபுரமே பூர்வகாலச் சிங்கை நகராம். இம் மதம் எனக்குச் சம்மதம் என்கிறார்.

வல்லிபுரத்திலே புராதன தலைநகரம் ஒன்று அழிந்துபட்டுள்ள தெண்ணுமுண்மை அவ்விடத்ந்தை சென்று பார்ப்பாக்கு இன்றும் புலனாகும் ஆயின் அது சிங்கைநகரமா! அல்லது வேறொரு நகரமா! என்பதும் தான் அறியவேண்டி நிற்பது. துறைமுகமாகவிருந்தால் இயற்கையொதுங்குடாவுள்ளதாக விருந்தால் கரையருகிலேயிருந்தால் அன்றியும் பழைய நகரத்தழிபொருட்கள் இருந்தால் அவை சிங்கை நகரை மாத்திரம் தான் குறிப்பிடும். அந்நகரின் சிறப்பு இலட்சனங்களா! அல்லது பிற ஒரு துறைமுகநகரையும் குறிக்கவல்ல பொது இலட்சணங்களா? என்றும் அறிதல் வேண்டும். அன்றியும் அச்சாசனம் சிங்கைநகரை ஒரு துறைமுகநகர் என்று குறிப்பிடவில்லையே. நிற்க.

வலலிபுரத்திலே சிங்கைநகர் உண்டாகியிருந்த தென்பார்க்கு உண்மையில் சிங்கைநகர் எப்படிப்பட்டது என்ன இலட்சணங்களை உடையதென்பது விளங்கவில்லை என்பது பின்னர் நிச்சயமாய்த் தெளிவாகிவிடும். இவ்வாராய்ச்சிக்காரர் அச்சாசனத்தை வல்லிபுரத்துடன் சார்த்திக் காணும் காட்சியிலே வல்லிபுரத்திலே சிங்கைநகர் இருப்பதாக அவர்க்கு நிருபணமாகின்றது. அவற்றின் உண்மை நிலை வெளியாக எல்லாச் சிக்கல்களும் நீங்கிவிடும் ஈண்டு இவ்வுண்மையை விளக்குவாம்.

இச்சாசனத்தாலும், வல்லிபுரத்தில் இவர்கள் எடுத்துக் காட்டிய புராதன கட்டடம் தானம் என்பனவற்றாலும் வல்லிபுரத்தில் சிங்கைநகர் நிருபணமாவது எவ்வாறு சிங்கைநகரை வல்லிபுரத்தில் நிருபிக்குமாற்றல் மூன்று சான்றுகளாலும் உண்டாதல் வேண்டுமே. அவை ஒவ்வொன்றாகவோ எல்லாம் சேர்ந்தோ அந்நிருபணத்தைக் கொடுக்க வேண்டுமே. அவை ஒன்றிலேயும் அத்தகைய ஆற்றல் இல்லையே. இச்சாசனத்தில் பொங்கொலி நீா சிங்கைநகர் ஆரியரைச் சேராத அநுராசர் தங்கள் மடமாதர்கள் கங்கணம் வேற்கண்ணிணையாற் காட் டினார், காமர்வளைப் பங்கய கையாற்றிலதம் பாரித்தார் என்ற அளவிலே அந்நிருபணத்தில் என்னபகுதி அல்லது என்ன குறிப்பு பெறப்பட்டது.

இச் சொற்றொடர்களுக்கும் வல்லபுரத்துக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது. ஒரு சம்பந்தமுமில்லையே அக்கூற்றுக்களால் அல்லது சொற்றொடரால் சிங்கைநகர் எங்கேயுண்டாகியிருந்ததென்று விசாரித்துக்கொண்டு வந்தார்க்கு அது இன்ன இடத்தில் இருந்தது என்றதில் ஏதாவது இடக்குறிப்பு அற்பசொற்பமேனும் பெறப்படுகிறதா? ஏதாவதொரு இடமும் அதில் சுட்டப்படவில்லையே. சிங்கையாரியர் வென்றியை அன்றி வல்லமையைச் சிறப்பித்துச் சொல்லும் வகையிலே அவர்களைச சேர்ந்து வாழாத அநுராசர் மனைவிமார்கள் கங்கணம் வேற் கண்ணினையாற் காட்டினார்கள். (கங்கணம் , கண்ணீர்) கண்ணினையாற் கண்ணீர் சோர்ந்து அழுதார்கள். காமர்வளையலணிந்த பங்கய (தாமரை) க் கையால் திலதம் (எள்ளு) இறைந்தார்கள் என்கின்றது. (அதாவது கணவனை இழந்து கைமைக்கடன் செய்தார்கள் என்று சொல்லும் வகையிலே சிங்கையாரியரது வென்றியைச் சிறப்பித்துக் கூறுகின்றது) அதுசிங்கைநகரைச் சுட்டிப்பேச வந்ததன்று.

சிங்கை நகராரியரைச் சுட்டிப்பேசவந்தது. இலங்கையில் உள்ள எந்த இடத்துக்கும் அது பொது. சிங்கையாரியர் முன்னர் எந்த இடத்தில் வாழ்ந்தார்களோ அந்த இடத்து அவர்கள் மேற்செலலும் யோக்கியமும் தகுதிப்பாடும்தான் அதற்குள்ளது. சிங்கைநகர் விசேடமாக எந்த ஒரு இடத்தில் உண்டாயிருந்தது. என்ற விசாரணைக்கு விடையிறுக்க வல்லனவாயுள்ளகுறித்த அம்சங்களைக் கொண்டு வரவில்லை. எனவே அதனைக்கொண்டு சிங்கை நகர் எங்கே எவ்விடத் தில் உண்டாயிருந்தது என்னும் நகர் விசாரணைக்குப் போகப்படாது. அதாவது வல்லிபுரப்பெயர் இதில் விதந்து சொல்லப்படவில்லை. இன்னும் என்னையெனின் வல்லிபுரக்கரைசிங்கைநகர், வல்லிபுரக்கரைச்சிங்கைநகராரியர் என்று இச்சாசனம் சொல்லியிருக்கவில்லை. எனவே வல்லிபுரத்தானத்துடன் இச்சாசனத்தைக் கூட்டிவைத்துச் சிங்கை நகரை அறியக்கூடிய இயையும் தொடர்பும் இதற்கில்லை. அற்றன்று வல்லிபுரம் ஒரு கடற்கரைத் தானத்தன்றோ பொங்கொலி நீர் அலையெறிந்து சப்திக்கும் ஆழிக்கரையைக்குறித்து வந்ததன்றோ அவ்வாறாயின் ஏன் அது வல்லிபுரக்கரையைக் குறிக்காது எனவினவலும் எழுமோவெனின்! இலங்கைக் கடற்கரையெங்கனும் பொங்கொலி நீக் கரைதானே! அதாவது அலையெறிந்து சப்திக்கும் ஆழிக்கரை தானே எனவே அச்சிங்கைநகர் வல்லிபுரம் தவிர்ந்த இலங்கைக் கடற்கரையின் ஏதாவதொரு கடற்கரையிலிருந்தாலும் அதைக் குறித்தும் அச்சாசனம் அவ்வாறுதானே எழ வல்லதாம்.

அன்றியும் இங்கே பொங்கொலி நீர் என்பது நிச்சயமாகக் கடற்கரையைக் குறித்து வந்ததென்று சொல்லுதலும் இயலாதே. என்னையெனின் சாசனத்தைப் பாடிய அவ்வெண்பாக்காரர் அவ்வெண்பாவை "வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே" என்றாற்போல் ஏதாவதொரு கருத்திற்குறிப்புடைப் பொருளாகவும் சொல்லியிருந்தல் கூடுமன்றே. அன்றேல் அச்சாசனக்காரர் நிச்சயமாகக் கடற்கரையைத்தான் கருதிக்கொண்டாராயின் அவ்வாறுணர்த்துவான் ஒலி என்பதைநீக்கி அலையென்பதைச் சேர்த்து பொங்கலையென்றும் சொல்லியி ருக்கலாமே. அன் றியும் அச்சாசனக்காரர் கடல், கரை, துறை என்றாற்போன்ற சொற்களுள் ஏதாவதொன்றனையுங் கூடச் சேர்ததுச்சொல்லாமல்விட்டாரன்றே திருச்சீரலைவாய், அலைவாய், அடைகரை என்னும்கடற்கரையைக் குறித்துப் பிற இடங்களில் வந்த தொடர்களையும் இங்கு நோக்கத்தக்கது. எனவே அச்சாசனம் வல்லிபுரக்கடற்கரையைத்தான் குறித்து வந்ததென்று கொள்ள -அதைச்சுட்டி மாத்திரந்தான் வந்ததென்று சொல்ல அற்பமேனும் அதற்குச் சிறப்பான இயைபு இல்லை.

(தொடரும்)

## போராளிகள்-படையினர் சந்தித்து உரையாடல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அருகந்தப் பிரதேசத்தில் கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப்பணிகளில் ஈடுபட்டிருந்த பாதுகாப்புப் படையினர், விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

கிழகக்கு மாகாண கட்டளைத்தளபதி கேணல் பானு, மட்டு. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன், ஜனார்த்தன, திலீபன் ஆகியோரையும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிமால் வெலிக்கே மற்றும் விசேட அதிரடிப்படையினரும் பேச்சுவார்த்தை நாடத்தியுள்ளனர்.

கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட இடங்களில் மேற்கொள்ளப்படும் மீட்புப்பணிகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

அதேவேளை, கேணல் பானு படையினரைச் சந்தித்தமை இதுவே முதற்தடவையாகும்.

(த-8)

## மட்டக்களப்பு நிவாரணப் பணிகள் பற்றி படையினர்-புலிகள் ஆராய்வு

(கொழும்பு)

கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்குவது தொடர்பான விசேட கூட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு அரச செயலகத்தில் நடைபெற்றது.

அரச அதிபர் வி. சண்முகம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் படை அதிகாரிகள், விடுதலைப்புலிகள், பாராளுமனற உறுப்பினர்கள், பிரதேச செயலாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நிவாரணப் பணிகளில் ஈடுபடும் விடுதலைப் புலிகளுக்கு படையினரால் இடையூறு ஏற்படுத்தப்படுவது குறித்து ஆராயப்பட்டது.

இது குறித்து கருத்து வெளியிட்ட மட்டு. அம்பாறை மாவட்ட அரசயல் துறைப்பொறுப்பாளர் இ.கௌசல்யன் படையினரின நட்வடிக்கை நிவாரணப் பணிகளில் ஈடுபடும் எமக்கு பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவித்தார்.

இதேவேளை, பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாதிக்கப்படாத மக்களும் உதவியாக செயற்படவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

(த-8)

## வழக்காளியும் எதிரியும் நிவாரண நிதிக்கு அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

விபத்துச் சம்பவம் தொடர்பான வழக்கில் நீதிமன்றத் தீர்ப்பினால கிடைக்கப்பெற்ற 10 ஆயிரம் ரூபாவை வெள்ள அனர்த்த நிதிக்கு ஒருவர் வழங்கியுள்ளார்.

கொக்குவிலைச் சேர்ந்த குகனேஸ்வரன் பிள்ளை இராஜலிங்கம் எனபவரே தனக்குக்கிடைத்த 10 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளார்.

கடநத வாரம் கொக்குவில் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்து ஒன்றில் பாதிக்கப்பட்ட பிரஸ்தாப நபர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். அவ்வழக்கு விசாரிக்கப்பட்டு பாதிக்கப்பட்டவருக்கு 10 ஆயிரம் ரூபாவை வழங்குமாறு எதிரிக்கு நீதிமன்றம் உத்திரவிட்டது.

அந் நிதியை யாழ். அரச அதிபர் ஊடாக வடமராட்சி பகுதி மக்களின் நிவாரண நிதியில் சேர்க்குமாறு இராஜலிங்கம் நீதிமனறிடம் கேட்டுள்ளார்.

இதேவேளை, அவ்வழக்கின் எதிரியான நவரத்தினம் என்பவா தானும் 5ஆயிரம் ரூபாவை நிவாரண நிதிக்கு வழங்குவதாக வேணுகானன் நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

இவர்களால் வழங்கப்பட்ட 15 ஆயிரம் ரூபா மொத்தப் பணத்தை வடமராட்சியில் பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரண நிதியில் சேர்க குமாறு நீதிமன்ற பதிவாளர் யாழ். அரச அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

(ச-5)

## மீட்புப் பணி தொடர்கிறது

(மருதங்கேணி)

அண்மையில் ஏற்பட்ட கடற்கொந்தளிப்பால் பாதிக்கபபட்ட மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தற்போதும் விடுதலைப்பேராளிகளாலும் தொண்டர்களாலும் மீட்புப் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இப் பிரதேசத்தில் கட்டட இடிபாடுகளிலும் மண்ணால் மூடப்பட்ட இடங்களிலும் கனரக வாகன உதவியுடன் மீட்பாளர்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அங்கு மீட்டகப்பட்டு வரும் சடலங்கள் மேட்டு நிலங்களில் புதைக்கப்படுகின்றன. சடலங்கள் உருக்குலைந்து அடையாளம் காண முடியாத நிலையில் உள்ளதால் உடனடியாக புதைக்கப்படுகின்றன.

இந்த வகையில் கடந்த 30ஆம் திகதி 7 சடலங்களும் முதலாம திகதி 3 சடலங்களும் மீட்கப்பட்டு புதைக்கப்பட்டதாகவும் இதுவரை 780 சடலங்கள் மீட்கப்பட்டதுடன் 2000 பேர் வரை காணாமல் போய இருப்பதாகவும் புதுக்காட்டுச்சந்தியில் இயங்கும் விசேட செயலணி குழுவினரின் இறுதிப்புள்ளி விபரங்கள் தெரிவிககின்றன.

(க-35)

## நாட்டுப் பற்றாளர் சாவு

(கிளிநொச்சி)

முல்லைத்தீவுப் பகுதியில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக நாட்டுப்பற்றாளர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

நாரந்தனை ஊர்காவற்றுறையைச் சொந்த முகவரியாகவும் 155ஆம் கட்டை கிளிநொச்சியை தற்காலிகமாக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னராசு நிக்சன் என்ற நாட்டுப் பற்றாளரே சாவடைந்துள்ளார்.

(ம-8)

# புத்தாண்டுப் பலன்கள் உங்களுக்கு எப்படி?



## கடகம்

நீங்கள் உயர்ந்த கம்பீரமான தோற்றமும், போதிய அளவு தசைப்பிடிப்பும், சம அளவிலான நிறத்தையும், அளவான வசீகரமும் உடையவர்கள். சுறுசுறுப்பும் பார்வையிலேயே பிறரைப் பணிய வைக்கும் ஆற்றலையும். உடையவர்கள். திறமை செல்வாக்கு அதிகமாகவே அமையப் பெற்றவர்கள். வாக்குத் திறமை உடையவர்கள். எளிதில் கோபம் அடையாதவர்களாகவும் பழகுவதற்கு இனிமையானவர்களாகவும் திகழ்வார்கள். ஒவ்வொரு செயலுக்குப் பிரதிபலன் எதிர்பார்க்கும் மனப்பான்மையைக் கொண்டவர்கள். முடிந்தவரையில் பிறருக்கு உதவி புரிவதிலும் நாட்டமுடைவர்கள்.

சனி பகவான் 25.06.2005 முடிய உங்கள் ராசிக்குப் பன்னிரெண்டாமிடத்தில் சஞ்சரிக்க உள்ளார். இது ஏழரைச் சனியின் முதல் கட்டமான விரயச் சனி ஆகும். உங்கள் ராசிக்குப் பகைவன் மட்டுமல்லாது, 8-க்குடையவராகவும் இருந்து 12-ல் இருப்பது விபரீத ராஜயோகமாகும். எனவே உங்களுக்கு சனி பகவான பெருமளவு தீமையைத் தரமாட்டார் எனலாம். இருப்பினும் சிறிய அளவில் கஷ்டங்களை ஏற்படுத்துவார்.

26.06.2005 முதல் வருடம் முழுவதும் உங்கள் ராசியிலேயே ஜென்மச் சனியாகச் சஞ்சரிக்க உள்ளார். இதனால் மனதில் உற்சாகம் குறைந்து சோம்பலும் அசதியும் அதிகரிக்கும். மனக் குழப்பம் உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் சில பல கோளாறுகள் ஏற்பட்டு மருத்துவ மனையில் தங்கிச் சிகிச்சை பெற வேண்டிய நிலை ஏற்படும்.

குரு பகவான் வருட ஆரம்பம் முதல் 19.09.2005 வரை உங்கள் ராசிக்கு மூன்றாமிடத்தில் சஞ்சரிக்க உள்ளார். இதனால் மனோதிடம் குறைந்து போகும். எந்தக் காரியத்திலும் பய உணர்வு தோன்றும்.

### ஜனவரி

குடும்பம் : சந்தோஷமாக நடக்கும். சொந்த பந்தங்கள் ஆதரவு காட்டுவார்கள். கணவன், மனைவி ஒற்றுமை பலப்படும். பொருளாதாரம்: அபிவிருத்தியடையும். கையிருப்பு உயரும். கொடுக்கல், வாங்கல் சரளமாக நடக்கும். காசு, பணச் சேர்க்கை திருப்தியளிக்கும்.

ஆரோக்கியம்:நல்ல நிலையில் இருக்கும். தொழில் வியாபாரம்:உங்களது கனிவான அணுகு முறையாலும், வியாபாரத் தந்திரத்தாலும் கவரப்பட்டு வாடிக்கையாளர்கள் அதிகரிப்பார்கள். உற்பத்தியும் விற்பனையும் பெருகும். இலாப வரவுகள் கூடும்.

பெண்கள்: உங்களது கடந்த காலச் சுமைகளைக் குறைத்துக் கொள்ளலாம்.பல நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். முன்னேற்றமடையலாம்.

சாதகமான திகதிகள் :2,3,11,12,18,20,21,26,30.

### பெப்ரவரி

குடும்பம் : என்னதான் மாடாக உழைத்தாலும் உங்களது அருமையைக் குடும்பத்தினர் உணர்ந்து கொள்ளமாட்டார்கள். பிள்ளைகள் உங்கள் சொல் பேச்சைக் கேட்காமல் சில பிரச்சினைகளை உண்டு பண்ணுவார்கள். மனைவியின் உடல் நலனில் சில பாதிப்பு ஏற்படும்.

பொருளாதாரம்: கொஞ்சம் இறுக்கமான சூழ்நிலை தான். வீண் செலவுகள் ஏற்பட்டு கையிருப்பைக் கரைக்கும். வரவேண்டிய பாக்கிகள் தாமதமாக வந்து சேரும். இலாப வரவுகள் குறையும். ஆரோக் கியம்: வீண் அலைச்சல்களால் அசதியும் உஷ்ண சம்பந்தமான நோய்களும் உண்டாகும். தொழில் வியாபாரம்: மந்த நிலை அடையும். வாடிக்கையாளர்கள் அதிருப்தி அடைவார்கள். உங்களது நேரடிக்கவனம் அவசியமானதாகும். கிடைத்த ஒப்பந்தம் அல்லது ஓடர் கைநழுவிப் போகவும் வாய்ப்பு உண்டு. பெண்கள்: அனாவசியச் செலவுகளைக் கட்டுப்படுத்துங்கள். தேவையற்றவாக்கு வாதங்களை மட்டுப்படுத்துங்கள். மாணவர்கள்: பத்திரிகைத்துறை, கணிதம், மொழியியல் துறையினர் தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

சாதகமான திகதிகள் :2,5,6,7,8,14,15,21,22,26,27.

### மார்ச்

குடும்பம்: பெற்றோர்களின் உடல் நலம் பாதிப்பு அடையும். குடும்பத்தில் மூன்றாவது நபரின் தலையீட்டைத் தவிர்க்க வேண்டும். கணவன், மனைவி ஒற்றுமை குறையும். பொருளாதாரம்: கொடுக்கல், வாங்கலில் சுணக்கம் தோன்றும். பணநெருக்கடி உண்டாகும். கையில் வாங்கிப் பையில் போட்டதும் காசுபோன இடம் தெரியாமல் போய்விடும் நிலைதான் இந்த மாதம் காணப்படும் ஆரோக்கியம்: வயிறு சம்பந்தப்பட்ட உபாதைகள் தோன்றும். உணவுக் கட்டுப்பாடு அவசியம். தொழில் வியாபாரம்: பத்துக்கு வாங்கி எட்டுக்கு விற்க வேண்டிய நிலை இருக்கும் போது முன்னேற்றத்தை எங்கே காண்பது. இந்த ஒரு மாதமும் அகலக்கால் வைக்காமலிருப்பது நல்லது. பெண்கள்: உடல் நலனில் கவனம் தேவை. கேட்பார் பேச்சைக் கேட்டு குடும்பத்தில் குழப்பத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டாம். மாணவர்கள்: ஹோட்டல், முகாமைத்துவம், பொருளியல், சட்டம் போன்ற துறையினர் தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

சாதகமான திகதிகள் :5,6,7,13,14,20,21,25,26.

### ஏப்ரல்

குடும்பம் :குடும்பத்தில் ஏற்பட்டிருந்த குழப்பங்கள் தீரும். குறைகளையெல்லாம் ஒவ்வொன்றாகச் சரி செய்து வருவீர்கள். மனைவி, மக்கள் உங்களைப் புரிந்து நடந்து கொள்வார்கள். பொருளாதாரம்: அனாவசியச் செலவுகள் மட்டுப்படும். கொடுக்கல், வாங்கலில் சுணக்கம் தீரும். கடன் தொல்லை குறையும். ஆரோக்கியம்: சுகவீனம் நீங்கும். நாட்பட்ட நோய் கூட அதன் தீவிரத்தைக் குறைத்துக் கொள்ளும். தொழில் வியாபாரம்: மந்தநிலை நீங்கும். சில பெரிய மனிதர்கள் உதவிக்கு வருவார்கள். அரசாங்கத்திடமிருந்து கிடைக்க வேண்டிய கடன் உதவி உடனடியாகக் கிடைக்கும். பெண்கள்: இதுவரை குழந்தையில்லாத இளம் வயதினர்க்கு நல்ல செய்தி கிடைக்கும். குடும்பத்தினர் மதித்து நடப்பார்கள். மாணவர்கள்: விஞ்ஞானம், விலங்கியல்துறையினர், ஏற்றம் பெறுவர்.

சாதகமான திகதிகள் :1,2,3,4,10,17,18,28,29,30.

### மே

குடும்பம் : கணவன்,மனைவி ஒற்றுமை நல்லதாக இருக்கும். பெரியவர்களால் அனுகூலம் உண்டாகும். பிள்ளைகள் நலம் பலவும் பெறுவார்கள். பொருளாதாரம்: ரேஸ், சூதாட்டம்,பங்குச் சந்தை முதலியவற்றில் அதிர்ஷ்டப்பரிசுகள் கிடைக்க வாய்ப்பு உண்டு. பணம் பல வகையிலும் வந்து சேரும். ஆரோக்கியம்: வயிறு சம்பந்தப்பட்ட உபாதைகள் ஏற்பட்டு நீங்கும். தொழில வியாபாரம்: சில பெரிய மனிதர்களின் உதவியால் தொழில் வியாபாரம் முன்னேற்றம் அடையும். குத்தகைக்கு எடுத்து நடத்திவரும் தொழில் உங்களுக்கே சொந்தமாகக்கூடிய வாய்ப்புத் தெரிகிறது முயற்சி செய்து பாருங்கள். பெண்கள்: ஆசைப்பட்ட பொருட்களை வாங்கி மகிழலாம். பதவியிலிருப்போர் சம்பள உயர்வு, பதவி உயர்வு, கோரிய இடமாற்றம் அடைந்து மகிழ்வார்கள். மாணவர்கள்: மருத்துவம், வேத பாடம், மதம், விஞ்ஞானம், கால்நடை மருத்துவத் துறையினர் ஏற்றம் பெறுவர்.

சாதகமான திகதிகள் :1,7,8,10,19,20,26,27,30,31.

### ஜூன்

குடும்பம் : கணவன்,மனைவி ஒற்றுமை திருப்திகரமாக இருக்கும். குடும்ப முன்னேற்றத்திற்காகப் பாடுபடுவீகள். பெரியவர்களால் ஆதாயம் உண்டு. சொந்த பந்தங்கள் தேடிவருவார்கள். பொருளாதாரம்: வரவேண்டிய வசூல்கள் தக்க சமயத்தில் வந்து சேரும். பண நெருக்கடி குறையும். பூர்வீகச் சொத்துக்களில் நல்ல வருமானம் உண்டாகும். ஆரோக்கியம்: நல்ல நிலையில் இருக்கும். தொழில் வியாபாரம்: திறமையான ஆட்கள் கிடைப்பார்கள். எந்த முயற்சியும் உழைப்பால் பயன் தரும. உற்பத்தி மற்றும் விற்பனை அதிகரிகதும். வாடிக்கையாளர் களின் நம்பிக்கை , நல்லெண் ணத்தைப் பெறலாம். பெண்கள்: சந்தோஷமான காலம். பிள்ளைகளுடன் தெய்வீகத் தலங்களுக்கு யாத்திரை செல்லும் வாய்ப்பு உண்டாகும். மாணவர்கள்:கம்பியூட்டர், ஆங்கிலம், வரலாறு ஆகிய துறையினர் ஏற்றம்பெறுவர்.

சாதகமான திகதிகள் :3,4,10,11,15,16,22,23,24,27.

### ஜூலை

குடும்பம் : மகிழ்ச்சிகரமாக நடக்கும். பிள்ளைகளின் கல்வி, உடல் நலம், தொழில், உத்தியோகம் ஆகியவை முன்னேற்றமடையும். கணவன், மனைவி ஒற்றுமை உயர்வடையும். பொருளாதாரம்: வருமானத்தில் தடையில்லை. வரவேண்டிய வசூல்கள் தாமதமின்றி வந்து சேரும். சேர்ந்த பணத்தைப் பல வகையிலும் முதலீடு செய்யலாம். ஆரோக்கியம்: நல்ல நிலையில் இருக்கும். தொழில் வியாபாரம்: எதிர்பாராத சில சூழ்நிலைகளால் உங்களது தொழில்வியாபாரம் உச்ச நிலையை எட்டும். காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டியதுதானே . அரசாங்க வழிச்சலுகைகளும் எளிதில் கிட்டும். பெண்கள்: சமுதாயப் பணி கள் உயர்வடையும். குடும்பத்தினர் உங்களை மதித்து நடப்பார்கள். மனதில் சந்தோஷம் நிலவும். இளம் வயதினரின் திருமண முயற்சி வெற்றி பெறும். மாணவர்கள்: முகாமைத்துவம், மருத்துவம், சட்டம் போன்ற துறையினர் ஏற்றம் பெறுவர்.

சாதகமான் திகதிகள்: 8.9,13,19,20,21,22,26.28.

### ஆகஸ்ட்

குடும்பம் : கணவன்,மனைவி ஒற்றுமைக்குப் பங்கம் வராது. குடும்பத்தினரின் தேவைகளைச் சமயமறிந்து நிறைவேற்றி வைப்பீர்கள். அவர்களின் பூரண ஒத்துழைப்பு உங்களுக்கு கிட்டும். பொருளாதாரம்: ஏலச் சீட்டு, குலுக்கல் சீட்டு வகைகளில் எதிர்பாராத பணவரவு உண்டாகும். கொடுக்கல், வாங்கலில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். ஆரோக்கியம்: திடகாத்திரமாக இருக்கும். தொழில் வியாபரம்: பல நல்ல சந்தர்ப்பங்கள் உருவாகும். அவற்றைச் சரியானமுறையில் பயன்படுத்தினால் நீங்கள் இருக்கும் இடமே வேறு. புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கவும் வாய்ப்பு உண்டு. பெண்கள்; திருமணமாகாத இளம் வயதினர்க்கு திருமண யோகம் கூடிவரும். உத்தியோகஸ்தர்கள் உயர்வடைவார்கள். மாணவர்கள்: பொறியியல், விலங்கியல் துறையினர் ஏற்றம் பெறுவர்.

சாதகமான திகதிகள் :4,5,9,10,16,17,18,24,25,27.

### செப்டம்பர்

குடும்பம் : உடன் பிறந்தோரால் ஆதாயம் உண்டாகும். கணவன், மனைவி இருவரும் ஒற்றுமையாக நடந்து குடும்ப முன்னேற்றத்திற்காகப் பாடுபடு வார்கள். பெரியவர்களால் உதவி கிட்டும். பொருளாதாரம்: பணப்புழக்கம் தாராளமாகும். கொடுக்கல், வாங்கல் சரளமாகும். கடன்கள் அடைபடும். கடன்கள் வசூலாகும். ஆரோக்கியம்: கவலைப்படத் தேவையில்லை. தொழில் வியாபாரம்:சில நவீன உத்திகளைக் கடைப்பிடித்து உற்பத்தி-விற்பனையைப் பெருக்கலாம். பிரயாணத்தின் மூலம் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். பெண்கள்: புதிய நகை வாங்கியும் அணிந்தும் மகிழலாம். குழந்தைப் பேறில்லாத இளம் வயதினர் புத்திர சந்தானத்தை அடைவார்கள்.

சாதகமான திகதிகள் :1.5,6,28,29.

### அக்டோபர்

குடும்பம் : நல்ல நிலையில் இருக்கும். கணவன், மனைவி ஒற்றுமை பாராட்டத்தக்க அளவில் இருக்கும். பிரிந்து சென்ற உறவினர்கள் திரும்பவந்து சொந்தம் பாராட்டுவார்கள். பொருளாதாரம்: கொடுக்கல், வாங்கல் சுமார் நிலையில் இருக்கும். பணவரவில் பாதகமில்லை. செலவினங்கள் கட்டுக்குள் இருக்கும். ஆரோக்கியம்: சிறு சுகவீனம் ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரம்: பொதுவாக நல்ல நிலையில் இருக்கும். இன்னும் தீவிரமாக உழைத்தால் அதிக முன்னேற்றத்தை ஏற்படுத்தலாம். பெண்கள்: மனக் குழப்பமும் கவலையும் நீங்கி தெளிவான நிலை காணப்படும். உத்தியோகஸ்தர்கள் பதவி உயர்வு, சம்பள உயர்வினை அடைவார்கள்.

சாதகமான திகதிகள்: 3,6,10,11,13,14,20,26,30,31.

### நவம்பர்

குடும்பம் :கட்டுக்கோப்பாக குடும்பம் நடத்துவீர்கள். குடும்பத்தினர் உங்களை அனுசரித்து நடந்து கொள்வார்கள். தெய்வீக சம்பந்தமான சில நேர்த்திக் கடன்களை முடிப்பீர்கள். பொருளாதாரம்: நாலா வழிகளிலும் வருமானம் வந்து கொண்டிருக்கும். இதுவரை போக்குக் காட்டி வந்த கடன்காரர்கள். கடனைப் பைசல் செய்வார்கள். ஆரோக்கியம்: சளி, காய்ச்சல் முதலியன ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரம்: புதிய தொழில்களைத் துவங்குவதற்கும், புதிய கிளைகளை நிறுவுவதற்கும் இது உகந்த கால மாகும். அதிக முதலீடுகளைச் செய்யத் தேவையான பண வசதி கிட்டும். பெண்கள்: நீண்ட நாள் கனவு நிறைவேறும். பிள்ளைகளின் எதிர்காலத்திற்கென சில திட்டங்களைத் தீட்டுவீர்கள். குடும்பத்தினர் உங்கள் சொல்லைக் கேட்டு நடப்பார்கள். மாணவர்கள்: மொழியியல், பத்திரிகைத்துறை, சட்டம், வணிகவியல், ஜோதிடவியல் துறையினர் முன்னேற்றம் அடைவார்கள்.

சாதகமான திகதிகள்: 6 ,7,8,10,11,14,20,22,27,29.

### டிசம்பர்

குடும்பம் : மகன், மகள் சம்பந்தப்பட்ட சுபகாரியங்களுக்கென கணிசமான பணம் செலவழிப்பீர்கள். மனைவியின் உடல் நலனில் சிறு சுகவீனம் ஏற்பட்டு நீங்கும். பொருளாதாரம்: நல்ல நிலையில் இருக்கும். வரவேண்டிய பாக்கிகள் உரிய நேரத்தில் வசூலாகும். கிடைத்த பணத்தை பூமி-மனை முதலியவற்றில் முதலீடு செய்யலாம். ஆரோக்கியம்: எதுவிதப் பிரச்சினையும் இல்லை. தொழில் வியாபாரம்: பணியாட்கள் விசுவாசமாகவும் தீவிரமாகவும் உழைத்து தொழில் வியாபாரத்தை அபிவிருத்தி செய்வார்கள். தொழிலுக்குத் தேவையான நவீன உபகரணங்களை வாங்கிப் போடுவீர்கள். இலாபம் பெருகும். பெண்கள்: சோம்பலும் அசதியும் மறைந்து சுறுசுறுப்பும் உற்சாகமும் அதிகரிக்கும். மாமனார், மாமியாரின் ஆதரவு கிடைக்கும்.

மாணவர்கள்: விஞ்ஞானத்துறையினர் தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

சாதகமான திகதிகள் :3,4,5,6,12,14,23,24,30

(தொடரும் ....)

# பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் சுகாதார விஸ்தரிப்புத் திட்டம் அமுல்

(கொழும்பு)

'சுனாமி' பேரலைகளால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் சுகாதார விஸ்தரிப்புத் திட்டமொன்றை சுகாதார அமைச்சு அமுலாக்கியுள்ளது.

இடம்பெயர்ந்தவர்களைக் கொண்டுள்ள சகல நலன்புரி நிலையங்களிலும் பொது சுகாதார அத்தியட்சகர்கள் மற்றும குடும்ப சுகாதார அதிகாரிகளால் இச சேவைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

சுகாதார அமைச்சின் தொற்று நோய்த்தடுப்புப் பிரிவு அதிகாரி டாக்டர், சுகத் பீரிஸ் இது தொடர்பாக தகவல் வெளியிடுகையில்,

இப் பிரிவிலுள்ள வைத்தியர் ஒவ்வொரு மாவட்டத்திலும் தொற்று நோய்கள் பரவக்கூடிய அபாயம் தொடர்பாக மேற்பார்வை செய்வர் எனத் தெரிவித்தார்.

அத்துடன், திருகோணமலையிலுள்ள நலன்புரி நிலையமொன்றில் வாந்திபேதி பரவியுள்ளதாக வெளியான செய்தியை டாக்டர் பீரிஸ் மறுத்துள்ளார்.

இதேவேளை, பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுகாதார சேவைகளை விஸ்தரிப்பதற்காக சுகாதாரக் கல்விப் பணியகம் விழிப்புணர்வுத் திட்டமொன்றையும ஆரம்பித்துள்ளது.

எதிர்வரும் வாரங்களில் இத்திட்டம் விஷேடமாக நலன்புரி நிலையங்களிலுள்ள பெண்களுக்கு யுனிசெவ் மற்றும் உலக சுகாதார ஸ்தாபனம் ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டும் எனவும இத்திட்டத்தின் பணிப்பாளர் டாக்டர் திருமதி காந்தி ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.(ற-

# மட்டு. -அம்பாறை மாவட்டங்கள் கடும் மழையாலும் பாதிப்பு

## ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்வு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் கடந்த சில நாட்களாகப் பெய்த கடும் மழையினால் ஆயிரக்கணக்கான மகக்கள் இடம்பெயர்ந்துள்ளார்கள்.

அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று, சாய்ந்தமருது, அட்டாளைச்சேனை, ஆகிய பகுதிகளில் வெள்ளப்பாதிப்பு பெருமளவில் ஏற்பட்டுள்ளது. சுமார் ஆயிரத்து 200 குடும்பங்கள் இப்பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து உள்ளன.

மட்டக்களப்பு மாவட்டததில் வாழைச்சேனை, மொறக்கொடடாஞ்சேனை, சித்தாண்டி, தேவாபுரம், செங்கலடி உட்பட பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. (ற-8)

## அவல நீக்க ஆற்றுப்படையரங்கு

(யாழ்ப்பாணம்)

சுனாமி கடல் பேரனர்த்தத்தின் காரணமாக வாழ்விடங்களை விட்டு இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கும் மக்களுக்கான 'அவல நீக்க ஆற்றுப்படையரங்கு' ஆற்றுப்படுத்தலினை அரங்க செயற்பாடடுக்குழுவினர் நடத்திவருகின்றனர்.

கடந்த திங்கட்கிழமை புலோலி அமெரிக்க மெதடிஸ் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், மக்கள் ஆர்வமுடன பங்குபற்றி அனர்த்தம் ஏற்பட்ட பொழுது தமக்கு ஏற்பட்ட அனுபவங்களையும் அந்தக் கணத்தில் தாங்கள் பட்ட அவலங்களையும் தமது உறவுகளின் இழப்புக்களையும் மன வேதனைகளையும் வெளிப்படுத்தினர்.

தற்போது தமக்குளள பிரச்சினைகளையும், இழந்து போன தமது வாழ்வை மீளக் கட்டியெழுப்புவதைப் பற்றியும் அவாகள் எடுத்தியம்பினா். அத்துடன் சிறுவர்களும் அவர்களுக்கான பிரத்தியேக அரங்காடலில் ஈடுபடடனர். இத்தகைய தொடர்ச்சியான செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கபபட வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் தரப்பில் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிகழ்வுகளில் அரங்க செயற்பாட்டுக் குழுவினருடன் இணைந்து வவுனியா, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரிகளில் கல்வி கற்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவர்களும் பங்குபற்றிவருவதுடன், யாழ்.கல்வி வலய ஆசிரியர்களும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆசிரியர்களும் ஆற்றுப்படுததற் செயற்பாட்டில் ஈடுபட முன்வந்துள்ளனர்.

இச் செயற்பாடானது யாழ். மாவட்டத்தில் மட்டுமன்றி முலலைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலும் நடைபெற்று வருகின்றது. அரங்கச் செயறபாட்டுக் குழுவினருடன் இணைந்து கிளிநொச்சி மாவட்ட ஆசிரியர்களும் அரங்க செயற்பாட்டாளர்களும் மக்களின் அவலம் நீக்கும் அரங்க நிகழ்வுகளில் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற)

## பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு

# வெளிநாட்டு உதவிப் பொருட்கள் விமான மூலம் அனுப்பிவைக்கப்படும்

(கொழும்பு)

கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வழங்கப்படும் வெளிநாட்டு உதவிப் பொருட்களைச் சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு விமானங்கள் மூலம் அனுப்பிவைக்கத் தீர்மானித்திருப்பதாக துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் பிரதி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ பல நாடுகள் முன்வந்துள்ளன.

இந்தியா, கொரியா, அமெரிக்கா, சுவீடன், சவூதி அரேபியா, கென்யா போன்ற நாடுகள் ஏற்கனவே நிவாரண உதவிகளை வழங்கியுள்ளன.

கிடைக்கப்பெற்ற உதவிப் பொருட்களை இயன்றளவு பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பிவைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ற-8)

# பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் ஆஸிக்கு மீண்டும் வெற்றி வாய்ப்பு

அவுஸ்திரேலிய-பாகிஸ்தான் அணிகளிடையே சிட னியில் நடைபெறும் மூன்றாவது டெஸ்ட போட்டியிலும் பாகிஸ்தான் அணி



தோல்வியடையும் நிலையே அதிகமாகக் காணப்படுகிறது. முதல் இரு போட்டிகளிலும் அவுஸ்திரேலிய அணியே வெற்றி பெற்றது.

கடந்த சனியன்று ஆரம்பமான இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி, முதலில துடுப்பெடுத்தாடியது. தனது முதல் இன்னிங்ஸில் 304 ஓட்டங்களுக்கு சகல விக்கெற்றுக்களையும் இழந்தது.


சல்மான் பட் 108 ஓட்டங்களையும், யாசீா ஹமீட் 58 ஓட்டங்களையும், யூனிஸ்கான் 46 ஓட்டங்களையும், கம்ரன் அக்மல் 47 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் மெக்கில் 5 விககெற்றுக்களையும், மக்ராத 4 விக்கெற்றுக்களையும் ஷேர்ன் வோன் 1 விக்கெற்றையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது முதல் இன்னிங்சை ஆடிய அவுஸ்திரேலிய அணி சகல விக்கெற்றுக்களையும் இழந்து 568ஓட்டங்களை எடுத்தது.

கடந்த ஆண்டு ஒரு சதத்தையும் அடிக்காத பொன்டிங் இவ்வாண்டு முதற் போட்டியிலேயே இரட்டைச் சதமடித்தாா். அவா் 207 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தாா். இது அவரது 21 ஆவது சதமாகும்.

கில்கிறிஸ்ட்டும் 113 ஓட்டங்களை எடுத்து சதமடித்தாா்.



மாட்டின் 67 ஓட்டங்களையும் ஹேடன் 26 ஓட்டங்களையும் கிளார்க் 35 ஓட்டங்களையும வெற்ஸன் 31 ஓட்டங்களையும எடுத்தனா் உதிரிகளாக 42ஓட்டங்கள் பெறப்பட்டன.

பந்துவீச்சில் டினேஸ் கனேரியா சிறப்பாகப் பந்து வீசி 7 விக்கெற்றுக்களையும் நவீட்-உல்-ஹசன் 3 விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர்.

264 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தனது இரண்டாவது



இன்னிங்சைத் தொடங்கிய பாகிஸ்தான் அணி 15ஆவது ஓவரில் 1 விக்கெற்றை இழந்து 67 ஓட்டங்களை எடுத்திருந்தது. சலமன் பட் 21 ஓட்டங்களுடன ஆட்டமிழந்தார். யாசீர் ஹமீட



40 ஓட்டங்களுடனும் யூனிஸ்கான 5 ஓட்டங்களுடனும் ஆட்டத்தை தொடர்கின்றனா். (து-7)


# இங்கிலாந்துக்கு எதிரான கேப்டவுன் டெஸ்ட்

இஙகிலாநது-தென்னாபிரிக்க அணிகளிடையே கேப்டவுனில நடைபெறும் மூன்றாவது டெஸ் போட்டியில் தென்னாபிரிக்க



அணி தனது முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெற்றுக்களையும இழந்து 441 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

கடந்த ஞாயிறன்று ஆரமபமான இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாட விரும்



பிக் களமிறங்கியது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரரரான ஸ்மித் 74 ஓட்டங்களையும் ஜக்கலிஸ் 149 ஓட்டங்களையும் நிக்கி போயே 76 ஓட்டங்களையும் பெற்றனர். உதிரிகளாக 28 ஓட்டங்கள் கிடைத்தன.



பந்து வீச்சில் பிளின்ரொப் 4 விக்கெற்றுக்களையும் கைல்ஸ் 3 விக்கெற்றுக்களையும் ஹோகார்ட் 2 விக்கெற்றுக்களையும் எஸ்.ஜோன்ஸ் 1 விக்கெற்றையும் வீழ்த்தினர். தொடர்ந்து தனது முதல் இன்னிங்சை ஆடிய இங்கிலாந்து அணி இரண்டாம் நாள் ஆட்ட முடிவில் 4 விக்கெற்றுக்களை

## விளையாட்டுச் செய்திகள்

இழந்து 95 ஓட்டங்களை எடுததிருந்தது. ஸ்டிரஸ் 45 ஓட்டங்களையும் ரெறஸ்கோதிக் 28 ஓட்டங்களையும் வோஹன் 11 ஓட்டங்களையும் எடுத்தனர். ஹோகார்ட் ஓட்டம் எதுவும் பெறாமலும், கிரஹம் தோர்ப் 6 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருக்கின்றனர். நிற்றனி 2 விக்கெற்றுக்களையும் பொலக், லாங்வெலட்ற் ஆகியோர் தலா 1 விக்கெற்றையும் வீழ்த்தினர். ஆட்டம் தொடர்கிறது. (து-7)

# சுனாமி நிவாரண நிதிப் போட்டி அணிகளின் விபரம் அறிவிப்பு

கடல் கொந்தளிப்பு அனாத்த நிவாரண நிதிக்காக எதிர்வரும திங்கட்கிழமை நடைபெறவுள்ள நலநிதிப் போட்டிக்கான ஐ.சி.சி.லெவன் மற்றும் ஆசிய லெவன் அணி வீரர்களின் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மெல்பேர்னில் நடைபெறவுள்ள இப் போட்டிக்கான ஐ.சி.சி.லெவன் அணிக்கு அவுஸ்திரேலிய அணித்தலைவா் ரிக்கி பொண்டிங் தலைமை தாங்குகிறார். அவருடன் மத்தியூ, ஹேடன், கில்கிறிஸ்ற், ஷேர்ன் வோன் கிளைன்மெக்ராத் ஆகியோர் அவுஸ்திரேலியா சார்பிலும, ஸ்டீபன் பிளமிங், கிறிஸ கெயின்ஸ், டானியல் விற்றோரி ஆகியோா் நியூசிலாந்து சாா்பிலும பிரையன்லாரா, கெய்ல், பிராவோ ஆகியோர் மேற்கிந்திய தீவுகள் சார்பிலும் பங்குபெறுவர். அணி முகாமையாளராகவும் பயிற்சியாளராகவும் ஸ்ரீவ்வோ கடமையாற்றுவார்.

ஆசிய லெவன் அணிக்கு இந்திய அணித்தலைவா் கங்குலி. தலைமை வகிப்பார் இவருடன ஷேவாக், டெண்டுல்கா், டிராவிட, சஹீர்கான, கும்ளே ஆகியோர் இந்தியா சார்பிலும், சனத் ஜெயசூரிய, மாவன் அத்தப்பதது, குமாா் சங்ககார, சமிநத வாஸ், முரளிதரன் ஆகியோர் இலங்கை சார்பிலும், யூசுப் யுகானா, சொகைப் அக்தார் ஆகியோர் பாகிஸ்தான் சார்பிலும் அலோக் கபாலி பங்களாதேஷ் சார்பிலும் பங்குபற்றுவா். (து-7)

## பரீட்சைத் திகதி பிற்போடப்பட்டுள்ளது

அகில இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம், யாழ். மாவட்ட உதைபந்தாட்ட லீக், யாழ்.உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி நடாத்தப்படவிருந்த உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சையை, சம்மேளனம் நாட்டில் நிலவும் சூழ்நிலை காரணமாக பிற்போட்டுள்ளதாக யாழ். உதைபநதாட்ட லீக்கின் தலைவர் எஸ்.கிளிபேட் அன்ரனிப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இப் பரீட்சை மீண்டும் எப்பொழுது எங்கே நடைபெறும் என்ற விபரங்களை யாழ்.உதைபநதாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் கப்ரின் டி.ஏ.எம்.குணசிங்கம் இப் பரீட்சைக்கு விண்ணபபித்த பரீட்சார்த்திகளுக்கு தனித்தனியே அறிவிப்பார் எனறும் ஊடகங்கள் மூலமும் தெரிவிக்கப்படும் என்றும் தெரிய வருகிறது. (க-110)

# ஈராக்கில் கார்குண்டுக்கு 7 பேர் பலி



பாக்தாத்தில் ஈராக் பிரதமர் இயாது அல்லாவியின் கட்சி அலுவலகம் அருகே கடந்த திங்கட்கிழமை நடந்த கார்க் குண்டுவெடிப்பில் 2 பொலிஸார் உடபட 3 போ இறந்துள்ளனர். 25 பேர் காயமடைந்தனர்.

பிரதமாின் கட்சி அலுவலகம் அமைந்துள்ள இத்தெருவிலேயே ஈராக அரசின் தலைமை அலுவலகமும் அமெரிகக் தூதரகமும் உள்ளன.

பாக்தாத்துக்கு 80 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள பலாதில் இடம்பெற்ற மற்றொரு கார்க்குண்டுவெடிப்பில் தேசிய பாதுகாப்புப் படைவீரர்கள் 4பேர் இறந்துள்ளனர். (து)



அந்தமான் - நிக்கோபர் தீவு மக்கள் சுனாமியால் மிகவும் பாதிக்கப்பட்டனர். அதன்பிறகும் அவர்களை ப,கம்பம் தொடர்ந்து மிரட்டியதால் பயந்துபோய் பிள்ளைகளுடன் நேற்றுமுன்தினம் விமானத்தில் வந்து சென்னையில் இறங்கிய காட்சி.

# இந்திய தென்கிழக்கு கடற்பகுதியை 50 ஆண்டுகளுக்கு சுனாமி தாக்காது

அடுத்த 50 ஆண்டுகளுக்கு இந்தியாவின்தென்கிழக்கு கடற்கரைப் பகுதியை சுனாமி அலைகள் தாக்கும் அபாயமில்லை என்று ஐ.ஐ.டி. பேராசிரியர் யோகேந்திர சிங் கூறியுள்ளார்.

இருப்பினும், இந்தியக் கடறபகுதிகளில் சுனாமி எச்சரிக்கை அமைபபை நிறுவ மத்திய அரசு ரூபாய் 125கோடி செலவிட திட்டமிட்டுள்ளது.

ரூர்க்கியில் உள்ள ஐ.ஐ.டி.யில் நிலநடுக்கப் பொறியியல்துறைத் தலைவராக இருப்பவர் யோகேந்திர சிங். சுனாமி தாக்குதலுக்குப் பிறகு அந்தமான் தலைநகர் போர்ட் பளேரில் தனது குழுவினருடன் முகாமிட்டு ஆய்வு நடத்துகிறார்.

நாங்கள் இதுவரை நடத்திய ஆய்வு முடிவுகளின்படி சுனாமி அலைகள் இந்தியாவின் கிழக்கு கடற்கரைப் பகுதியை அடுத்த 50 ஆண்டுகளுக்கு நிச்சயம் தாக்கும் அபாயமில்லை. இது 5 ஆயிரம் ஆண்டுகளாகவும் அதிகரிக்கலாம். இனி லேசான நில அதிர்வுகள் இருக்கும். ஆனால் பெரிய நிலநடுக்கம் இருக்காது என அவர் தெரிவித்துள்ளார். (து)



மாரடைப்பால் மரணமடைந்த பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜே.என்.தீக்ஷித் உடலுக்கு குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய காட்சி.

# உயிருடன் மீட்கப்பட்ட மீனவர்

ஒருவார காலமாகப் படகின் அடியில் சிக்கிக்கிடந்த 24 வயது மீனவரொருவர் கடந்த திங்கட்கிழமை உயிருடன் மீட்கப்பட்டார்.

இச்சம்பவம் இந்தோனேஷியாவைச் சேர்ந்த பண்டா ஆசி என்ற இடத்தில் நடைபெற்றது.

ஒருவாரகாலமாக எவ்வித உதவியுமின்றிப் பட்டினி கிடந்ததால் மூர்ச்சையடைந்திருந்த நிலையில் அவா பண்டா ஆசி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். அவரது உடலில் துளியளவு நர்ச்சத்து இல்லாததால் அவருக்கு குளுக்கோஸ் ஏற்றப்படுகிறது. உடல் ரீதியாக மட்டுமன்றி மனாதியாகவும் அவா பாதிக்கப்படடிருப்பதாக டாகடர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 26ஆம் திகதி அவர் லம்புலா கடலோரத்தில் சுனாமி ஏற்பட்டபோது அடித்து வரப்பட்ட படகினடியில் சிக்கிக்கொண்டார் என நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

இனி மேல் யாரும் உயிருடன் தப்புவது அரிது என்பதால் மீட்புப்பணி நிறுத்தப்படும் நிலையில் இந்த மீனவர் காப்பாற்றப்பட்டது தெய்வ அனுக்கிரகம் எனத் தெரிவிக்கபபடுகிறது. (து)

# அந்தமானில் பழங்குடியினரை காப்பாற்றிய இயற்கை

சுனாமியால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள அந்தமான் நிகோபார் தீவுகளில் பவள பாறைகள் மற்றும் அடர்ந்த காடுகள காரணமாக எராளமான பழங்கடி மக்கள் தப்பிப்பிழைத்துள்ளனர்.

கடல் கொந்தளிப்பால் அந்தமானில் உள்ள நிகோபார் தீவுகளில் பெரும் சேதம் ஏற்பட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்துள்ளனர். பல ஆயிரம் பேர் உடைமைகளை இழந்தனர்.அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகளில் ஷாம்பென்ஸ், நிக்கோபாரி, ஜாராவஸ் ஓங்கீஸ், கிரேட் அந்தமானிஸ் ஆகிய பழங்குடி மக்கள் வசிக்கின்றனா.

இதில் கார் நிகோபாா தீவுகளில வசிக்கும் நிக்கோபாா பழங்குடியின மக்களைத் தவிர மற்ற இடங்களில் வசித்து வரும் பழங்குடியின மக்கள் சுனாமி பேரழிவில் இருந்து தப்பிவிட்டனர்.

இதற்குக் காரணம் அந்தப் பகுதிகளில் உள்ள பவளப் பாறைகள் மற்றும் அடர்ந்த காடுகளே ஆகும். அந்தமானின் மேற்குப் பகுதியில் ஏராளமான பவளப் பாறைகள் இயற்கையாகக் கடலைச் சுற்றி சுவர் போல் அரணாக அமைந்துள்ளது.

மேலும் இந்தப் பகுதி அதிக அளவு மரங்கள் நிறைநத பகுதியாதலால கடல் அலைகள் பெரும் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. இந்த இயற்கை அரணைகளைத் தாண்டி கொந்தளித்த கடல் உள்ளே வரமுடியாததால் இங்கு வசிக்கும் பெரும்பாலான பழங்குடி மக்கள் தப்பிவிட்டனர்.

இதேபோல் தெற்கு மற்றும் மத்திய அந்தமானில் ஜாராவஸ் இனப் பழங்குடி மக்கள் அதிகம் வசிக்கின்றனர். அதிக அளவு பலா மரங்களும், ஒருவகை அடர்ந்த புற்களும் கடலையொட்டிய பகுதியில் 120 முதல் 130 அடி வரை இயற்கை அரணாக அமைந்துளளது. இதனால் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டபோது அதன் தாக்கம் அதிகம் காணவில்லை.

அதேபோல் ஸ்டிரைட் தீவுகளில் வசிக்கும் கிரேட் அந்தமானிஸ் பழங்குடியினரும் தப்பிவிட்டனர். இவர்கள் எண்ணிக்கை வெறும் 40 மட்டுமே. இவர்கள் வசிக்கும் அடாநத காடுகள் கடல் பரபபை விட மிக உயர்ந்த பகுதியாதலால ராட்சத அலைகள உள்ளே வரவில்லை. லிட்டில் அந்தமான துகான் கிரீக் பகுதியில ஓங்கி இனப் பழங்குடியின மக்கள் 73 பேர் வசிக்கின்றனர். அவர்கள் அனைவரும் பாதிப்பின்றி பத்திரமாகவே உள்ளனர்.

அதே சமயம், கார் நிகோபார் தீவுகளில் வசிக்கும் நிக்கோபாரிஸ் பழங்குடியின மக்கள் சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ளனர். இங்கு 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நிக்கோபாரிஸ் மக்கள் வசிக்கின்றனர். இது தாழ்வான கடற்பகுதி. அதோடு வெட்டவெளி கடற்கரையைக் கொண்டது. எந்த இயற்கை அரணும் இங்கு இல்லை. இதனால் சுனாமி அலைகள் எளிதாக தீவுக்குள் வந்து பெரும் பாதிப்பை ஏற்படுத்தி விட்டன. இங்கு பழங்குடியின மக்கள் பலர் பலியாகியுள்ளனர். கிரேட் நிக்கோபார் தீவுகளில் வசிக்கும் ஷாம்பென்ஸ் பழங்குடியின மக்களும் இந்தப் பேரழிவிலிருந்து தப்பிவிட்டனர். இந்த மக்கள் ,பெரும்பாலும் அடர்ந்த காடுகளில மட்டுமே வசிபபாாகளா. உணவுக்காக வேட்டையாடுவார்களா. கடலை ஒட்டியுள்ள நிலப்பகுதிக்குள் இவர்கள் வருவதில்லை. மிக அரிதாக மீன்பிடிப்பதற்கா மட்டுமே இவாகளா கடல் அருகே வருவதுண்டு. இதனால் சுனாமி அழிவிலிருந்து இந்தப் பழங்குடியின மக்களும் தப்பிவிட்டனர். (து)



சுனாமி அலைகளால் இறந்தவர்களின் ஆத்மா சாந்தியடைய கலிபோர்னியாவின் சுன்னிவாலியில் அமைந்துள்ள இந்துக் கோவிலில் இந்தியாவைச் சேர்ந்த இந்து பக்தர்கள் இரங்கல் தீபம் ஏற்றிய காட்சி.

# சுனாமியால் அனாதையான குழந்தைகள்

## பெண்களுக்கு தலா ரூ.5லட்சம் உதவி

சுனாமியால் பாதிக்கப்பட்ட அனாதைகளான குழந்தைகள் மற்றும் பெண்களுக்குத் தலா ரூ.5லட்சம் வைப்புத் தொகையாக உதவிபெறும் வண்ணம் முதல்வர் ஜெயலலிதா உத்விதத் தொகைகளை உயர்த்த உத்தரவிட்டுள்ளார்.

கடந்த டிசெம்பர் 26ஆம் திகதி உலகமே இந்தியாவை உற்று நோக்கிய ஒரு கறுப்பு ஞாயிறு இயற்கை சீறியது. தமிழகக் கடல் பகுதிகள் மீது இதில் எதிர்பாராதவிதமாக அழிந்தோர் எண்ணிக்கை 8 ஆயிரத்தைத் தாண்டுகிறது.

சீறிவந்த அலையால் வாழ்க்கையைப் பறிகொடுத்தனர் பலர். உயிர்கள் மட்டுமல்ல உடைமைகளும் பறிபோயின. இயற்கை அன்னை சிலரின் கால்கள் கைகளையும் பறித்தாள். உயிர்களை இழந்தோரின் குழந்தைகளும் பெண்களும் அனாதைகளாக்கப்பட்டனர்.

பாதிப்படைந்தோருக்கு ரேஷன் கார்டுகள மறறும சானறிதழ்கள், அனைத்து உதவிகளையும் வழங்க தற்போது



சுனாமி அலைகளால் அனாதையாக்கப்பட்ட குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் ரூ.5லட்சம் உதவி தொகை வைப்புத் தொகையாக வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார். (து)

ஸ்பெயின் நாட்டின் கிராண்டா பகுதியில் நடைபெற்றுவரும் கார்ப்பந்தயத்தில பிரான்சு டிரைவர் ஸ்டீபன் பீட்டர் ஹென்ஷல், உதவி ஓட்டுனர் ஜீன் பவுல் ஆகியோரின் மின்னல்வேக இயக்கத்தில் மிட்சுபிசி கார் ஒன்று துள்ளி வருவதைப் படத்தில் காணலாம்.



# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் தரும்

## வடபுலத்தில் "லீஸ்மனியாசிஸ்" தீவிரமடையுமா?

## விஞ்ஞானத் துளிகள்

ஏ.கஜதீபன்,
விலங்கியல்துறை சிறப்பு மாணவன்,
யாழ்.பல்கலைக்கழகம்.

'லஸ்மனியாசிஸ்' என்றால் என்ன? இது எவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது? இதன் தாக்கம் எமது பிரதேசத்திலும் காணப்படுகின்றதா? என்றெல்லாம் எம்மில் பலர் இன்னமும் அறியாதவர்களாகவே இருக்கின்றோம்! ஆனால் இது எமது பகுதிகளையும் தாக்கத் தொடங்கி விட்டது.

'லஸ்மனியாசிஸ் (Leishmaniasis) என்பது தனிக்கல சவுக்குமுளை கொண்ட புரட்டோசோவன் (Protozoa) இனமான (Leishmania) இனால் ஏற்படுத்தப்படுகின்ற ஓர் நோயாகும். இது முதன்முதலாக பிரித்தானியாவைச் சேர்ந்த மருத்துவ உத்தியோகத்தரான 'வில்லியம் லஸ்மன்' (Sir William Leishman) என்பவரினால் அடையாளப்படுத்தப்பட்டது. இந்த நோய்க்காரணிகளின் காவிகளாக 'மணல் ஈ'க்கள் (Sond flies) தொழிற்படுகின்றன. வருடந்தோறும் ஏறத்தாழ இரண்டு மில்லியன் மக்கள் 'லஸ்மனியாவின்' தாக்கத்திற்கு உட்படுகின்றார்கள். உலக சுகாதார தாபனத்தின் (WHO) அறிக்கையின்படி இதுவரை ஏறத்தாழ பன்னிரண்டு மில்லியன் மக்கள் இன்நோயினால் தாக்கப்பட்டிருக்கிறார்கள்.

'லஸ்மனியாசிஸ்' ஆனது இரண்டு முக்கியமான வடிவங்களில் மனிதனைத் தாக்கலாம். ஒன்று அகத்து அங்கங்களை தாக்கும் (visceral) 'லஸ்மனியாசிஸ்'. இது Kala-azar எனப்படுகின்றது. ஈரல் போன்ற அகத்து அங்கங்களைத் தாக்குவதனால் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. மற்றையது தோலில் ஏற்படுகின்ற (cutaneous) 'லஸ்மனியாசிஸ்' ஆகும். இலங்கையில் தற்போது தோலில் ஏற்படுகின்ற லஸ்மனியாசிசே கண்டறியப்பட்டுள்ளது.

இந்நோயானது ஆரம்பத்தில் ஆபிரிக்கா மற்றும் மத்தியகிழக்கு நாடுகள் உள்ளடங்களாக ஏறத்தாழ 88 நாடுகளில் அப்பிரதேசங்களுக்குரிய ஓர் ஒட்டுண்ணி நோயாகக் கருதப்பட்டது. இந்நோயானது இலங்கையில் ஆரம்பத்தில் ஓர் உள்நாட்டிற்குரிய நோயாக (endemic disease) கருதப்படாதபோதிலும், இதன் காவிகளான 'மணல் ஈ'க்கள் இங்கு ஏற்கனவே இனங்காணப்பட்டுள்ளன. இந்நோயானது முதன்முதலாக இலங்கையிலே 1992ஆம் ஆண்டளவிலே மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து இலங்கைக்குத் திரும்பிய ஒருசிலரிடம் அடையாளம் காணப்பட்டது.

ஆனால் அண்மைக்கால ஆய்வுகளன்படி இலங்கையின் பெரும்பாலான உள்ளூர்வாசிகள் இந்நோயின் தாக்கத்திற்கு உட்பட்டுள்ளமை அறியப்பட்டுள்ளது.

மிக அண்மையில் முல்லைத் தவு மற்றும் வவுனியா ஆகிய பகுதிகளைச் சேர்ந்தீ இரண்டு 'லஸ்மானியா' நோயாளர்கள் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபட ஒட்டுண்ணியியல் பிரிவைச் சேர்ந்த விரிவுரையாளர்களினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்.

அண்மைக்கால ஆய்வுகளின்படி பெரும்பாலான நோயாளர்கள் வடமத்திய, மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்களாவர். அத்துடன் இனம் காணப்பட்ட பெரும்பாலான நோயாளர்கள் யுத்தம் நிலவிய பிரதேசமான மணலாற்றை அண்டி வாழ்ந்தவர்கள் என்பதே முக்கியமானதாகும். அதாவது பற்றைக்காடுகள் மற்றும் ஈரலிப்பான மணல் மேடுகள் நிறைந்த பிரதேசங்களில் காணப்பட்ட இராணுவக் காவலரணகள், அதனை அண்டிய எல்லைக்கிராமங்களில் வசிப்பவர்களாவர்.

இந்நோயின் தாக்கத்திற்குட்பட்டவர்களிற்கு பொதுவான அறிகுறிகளான, காய்ச்சல், உடல்நிறை குறைதல், குருதிச்சோகை என்பவற்றுடன் மண்ணீர், ஈரல், நிணநீர்க்கணுக்கள் போன்றன வக்கம் அடைந்தும் இருக்கும். எனினும் இலங்கையில் இதுவரை அடையாளப்படுத்தப்பட்ட தோலுக்குரிய 'லீஸ்மனியாசிஸ்' உடையவர்களில் முகம் மற்றும் கை, கால் போன்ற அவயவங்களில் 'விரணங்களை' (புண்போன்ற அமைப்புக்கள்) ஏற்படுத்தியுள்ளது. இவை பொதுவாக வட்டமான அமைப்புக்களாக இருப்பதுடன் பின்வரும் இயல்புடையனவாகவும் இருக்கும்.


01. சொறிநிலை ஏற்படுத்தாத புண்கள்.


படம் 1

02. செதில்தன்மை கொண்ட சிறிய கட்டுகள்.


படம் 2

03. வரண்ட அயரை ஏற்படுத்தும் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட புண்கள்.


படம் 3

எனவே இவ்வாறான அறிதறிகள் காணப்பட்டால் உடனடியாக வைத்தியரை அணுகி நோயைக் குணமாக்குவதுடன், நோய் தொற்றலடைவதையும் தடுக்க முடிகின்றது. (தொடரும்)

# எண்களால்

## உடல் எண் 5 உயிர் எண் 8

5, 14, 23 ஆகய திகதிகளில் பிறந்து திகதி, மாதம், வருடம் ஆகிய மூன்றையும் கூட்டிவருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 8 வருமேயானால் புதன், சனி ஆதிக்கத்தில் பிறந்தவராவர். இவர்கள் பார்ப்பதற்கு சுமாரான உயரமுள்ளவராகவும் காட்சியளிப்பர். இயற்கையிலே மனத்திடம் பெற்ற இவர்கள் தான் எந்தக் காாயத்தில் இறங்கினாலும் செய்துமுடிக்கும் வரை, அயராது உழைப்பர். சலர், ஆரம்பத்திலேயே வசதி படைத்தவர்களாகவும், இன்னும் சிலர் இளமையில் இருந்து போராடி, தன் தனித் திறமையால் உயர்ந்த நிலைக்கு வருபவராகவும் இருக்கின்றனர்.

பொதுவாக உத்தியோகத்தில் உள்ளவர்கள் கூடப் பெரும் பணம் சம்பாதிக்கும் திட்டங்களைப் போட்டும், தன் வருமானத்தை உயர்த்த வழி தேடுவர். பெயர் தனது பிறந்த திகதிக்குப் பொருத்தமானதாக அமையப் பெற்றவர்கள் தொழிலாலும், உத்தியோகத்தாலும் உயர்நிலையை அடைந்து வீடு, வாகனம், நிலம் போன்ற அனைத்து வசதிகளும் பெற்று வாழ்கின்றனர். ஆனால் பெயர் பொருத்தமின்றி அமையப்பெற்றவர்கள் வாழ்க்கையில் ஏறவும் இறங்கவுமாக இருக்கின்றனர். இதனால் தனது பெயரைப் பிறந்த திகதி எண்களுக்குப் பொருத்தமானதாக அமைத்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

இந்த எண்ணிக்கைக்காரர்கள் இயற்கைக் காட்சிகளையும், புதுமையான தொழிற்கூடங்களையும் கண்டுகளிப்பதில் ஆர்வமுள்ளவர்கள். இவர்கள் எங்கு சென்றாலும் எந்தவொரு புதிய பொருளைப் பார்த்தாலும் அதைப்பற்றி ஆராய்ந்து ரசித்துக்கொண்டிருப்பர். இரும்பு சம்பந்தமான பொருள்கள் அனைத்தும் இவர்கள் மனதைக் கவரும். தன் வாழ்க்கையில் முன்னேற்றம் காணவேண்டும் என்ற குறிக்கோளோடு அயராது உழைத்துக்கொண்டிருக்கும் இவர்கள் வாழ்க்கையின் உச்சஸ்தானத்தை அடைவர். இவர்கள் யாரும் புரிந்துகொள்ள முடியாத ஒரு புதிராக விளங்குவர்.

பலருக்கு உதவி செய்யும் மனப்பான்மை கொண்ட இவர்கள் தன்னால் முடிந்தவரை பிறருக்கு உதவுவர். ஆனால் முடியாத காரியத்தை முடியும் என மிகைப்படுத்திக் கூறமாட்டார். எல்லோரும் இவரை விசயமானவர் எனக் கூறுவர். சாதாரண மனிதராக இருந்தால்கூட இந்த எண்ணிக்கைக்காரர்கள் பலர் போற்றும் மனிதராக வாழும் வாய்ப்புள்ளது. ஆனால் பெயர் பொருத்தமானதாக அமையாவிட்டால் அவர்கள் நினைக்கின்ற திட்டமெல்லாம் நடைபெறாது. இதனால் பெயரைப் பொருத்தமானதாக அமைத்துக்கொள்ளவேண்டியது அவசியம்.

பிறருக்காக எந்தக் காரியத்தில் இறங்கினாலும் தைரியமாகச் செயல்பட்டு, வெற்றியை தேடிக் கொடுப்பர். ஆனால் தனக்கென்று ஒரு காரியத்தில் இறங்கும்போது சிறிது மனம் குழம்புவர். ஆனால் பெயர் பொருத்தமானதாக அமைந்துவிடுமேயானால் பல விஷயங்களில் வெற்றியே பெறுவர். தொழில் செய்வதில் மிகுந்த ஆர்வம் கொண்ட இவர்கள், தான் பெரிய தொழிலைச் செய்து பெரும் பணம் ஈட்டவேண்டுமென்று ஓடோடி உழைப்பர். உத்தியோகம் பார்க்கும் சிலர் தன் வருமானம் தனக்குப் போதவில்லையென்று வேறு ஏதாவது தொழில் செய்து பொருளீட்ட ஆர்வமாக இருப்பர்.

சட்டம், சமயம், கணிதம், சோதிடம், கலை போன்றவற்றில் இவர்களுக்கு ஆராய்ச்சி இருக்கும். தூரதேசப் பயணங்களை மேற்கொள்ளும் இவர்கள் ஒவ்வொரு இடத்திலும் என்ன பொருள் கிடைக்கிறது, அதை நாம் வியாபாரம் செய்து பொருளீட்ட முடியுமா? என்று சிந்தனை செய்வர். எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருக்கும் இவர்கள் ஓய்வெடுக்க நினைத்தால் முழுச் சோம்பேறி போல் இருப்பர். என்றும் இவர்களுக்கு ஆண்டவன் அருள் உண்டு. எல்லாப் பழக்கவழக்கங்களையும் பழகி அனுபவித்து விட்டுவிடுவர்.

## ஏற்றமிகு வாழ்வு

**தொழில்:-** இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு இரும்பு, தங்கம், வெள்ளி சம்பந்தமான அனைத்துத் தொழிலும் உகந்தவையே. அத்துடன் கமிஷன், காண்ட்ராக்ட், மின்சாரம், வாகனம் சம்பந்தமான தொழில் அனைத்தும் வெற்றி அளிக்கும்.

Dr.ஆர். துரைமுருகர்

**நோய் :-** புதன், சனி ஆதிக்கம் கொண்ட இவர்களுக்கு வயிற்றுக்கோளாறு, முதுகுவலி, மூட்டுவலி, கண், காதுவலி, இரத்தக்கொதிப்பு, மூலவியாதி போன்றவைகள் வந்துநீங்கும்.

**பெயர் அமைக்கும் முறை:-** புதன், சனி ஆதிக்கத்தில் பிறந்த இவர்களுக்கு சுக்கிரன், புதன் ஆதிக்கமான 6,15,24,33,42,60,69,14,23,32,41,50,59,77 போன்ற எண்களில் பெயர் அமைத்துக்கொள்வது சிறப்பாகும்.

**பின்பற்ற வேண்டியவை:-**

| | |
|---|---|
| யோகமான எண் | -5,6,1 |
| யோகமான திகதிகள் | -5,14,23,6,15,24,1,10,19,28 |
| யோகமான மோதிரக்கல் | -வைரம், ஜிர்கான் |
| யோகமான நிறம் | -நீலம், சாம்பல் நிறம் |
| ஆகாத நிறம் | -கறுப்பு, சிவப்பு |
| ஆகாத திகதிகள் | -இல்லை |

(தொடரும்)

அழிவி னவை நீக்கி ஆறுய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு. - குறள்

வலம்புரி

# சுனாமியோடு உள்நுழையும் வெளிநாட்டு ஆமி(கள்)

சுனாமி அனர்த்தத்தால் ஏற்பட்ட பேரழிவு இலங்கையின் வரலாற்றில் என்றுமே மறக்கமுடியாத நிகழ்வு. யாருமே எதிர்பாராத வேளையில் மனித உயிர்களைக்காவு கொள்வதற்கென்றே கரை நோக்கி வந்த கடற்பேரலை தனக்கு விருப்பமானவர்களுடன் தன் இருப்பிடம் திரும்பிவிட்டது.

ஆனால் அந்தக்கண நேரத்தில் நடந்த பேரதிர்ச்சியில் இருந்து - இழப்பில் இருந்து மக்கள் மீள முடி யாதவர்களாக தத்தளிக்கின்றனர்.

உணவு, உடை, நிவாரணப்பணிகள் என்ற எதனை வழங்கினாலும் இழந்து போன மனித உயிர்களை மீளப்பெறமுடியாது என்பதும், அதற்கு ஈடாக எதனையும் வழங்கமுடியாது என்பதும் அறியப்பட்ட உண்மை.

எனினும் அப் பேரழிவுகளில் இருந்து ஓரளவேனும் ஆற்றுப்படுத்துவதற்கு -அவர்களை தேற்றிஎடுப்பதற்கு அன்புப்பரிமாற்றமும், அரவணைப்பும், நிவாரணப்பணியும் மிகவும் அவசியமானது. அவ்வகையில் உடனடித் தேவையான உணவு,உடை என்பவற்றை வழங்கு வதில் பொதுமக்களும் , பொது அமைப்புக்களும் காட்டி வரும் அக்கறை வரவேற்கத்தக்கதாகும்.

அதேவேளை வெளிநாடுகளில் நிவாரணப்பணிகளில், மீட்புப்பணி என்ற பேரில் அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற நாடுகளிலிருந்து இலங்கைக்கு வருகின்ற படையினரின் எண்ணிக்கை அதிர்ச்சி தருவதாக இருக்கின்றது.

அமெரிக்காவும் இந்தியாவும் தமது படைப்படைகளைஇலங்கைக்கு அனுப்பிவைப்பதன் உண்மையான நோக்கம் மீட்புப்பணியில் மட்டும் ஈடுபடுவதாக இருந்தால் அதனை எவரும் மறுக்கமாட்டார்கள்.

ஆனால் மீட்புப்பணி என்ற பேரில் ஓர் ஊடுருவல் நடவடிக்கையாக அது அமையுமாயின் அதனை யாருமே ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இங்கு யாருமே என்ற பதம் ஈழத் தமிழர்களையும் ,வெளிநாடுகளின் ஊடுருவல் இலங்கையில் அறவே இருக்கக்கூடாது என எண்ணுகின்ற சிங்கள, முஸ்லிம் மக்களையும் குறிப்பதாக இருக்கும். எதுவாயினும் மீட்புப்பணி என்ற பேரில் இலங்கைக்கு வருகின்ற அமெரிக்க, இந்தியப் படையணிகளின் எண்ணிக்கை, அவர்கள் வருகின்ற விரைவு என்பவற்றை சீர் தூக்கி ஆராய்கின்றபோது இலங்கைக்குள் ஊடுருவ வேண்டுமென்பதான தோற்றப்பாட்டையே அது தருகிறது.

அமெரிக்காவைப் பொறுத்தவரை இலங்கைக்குள் தனக்கென்றொரு இடத்தைப் பிடித்துக் கொள்ளவேண்டும் என்பது நீண்டகால விருப்பமாக இருந்தது.

தனது விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினையை சாதகமாக்கிக் கொள்ளமுற்பட்டது. இதில் அந்நாடு ஓரளவு வெற்றிகண்டதாயினும் எடுத்தஎடுப்பில் தனது படைகளை இலங்கைக்குள் அனுப்பும் சாத்தியம் இல்லாமல் போயிற்று.

ஆயினும் இராணுவப்பயிற்சி, இராணுவ உதவி, விடுதலைப் புலிகளுக்கு எதிரான போக்கு என்பவற்றைக் கொண்டு இலங்கையில் ஓர் எழுதப்படாத ஆதிக்கத்தை அமெரிக்கா கொண்டிருந்தது.

அமெரிக்காவின் ஆதிக்கத்திற்கு இந்தியாவின் எதிர்ப்பு இருந்ததால் அதன் தாக்கம் அமுங்கிய நிலையிலேயே காணப்பட்டது. எனினும் இலங்கையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தை அமெரிக்கா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த தீர்மானித்தது. சுனாமியோடு தனது ஆமிகளையும் இலங்கைக்கு அனுப்பிவைத் துள்ளது.

இலங்கையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தால் அமெரிக்காவின் அதீத அக்கறையை உணர்ந்து கொண்ட இந்தியா தனது நாட்டில் நடந்த சுனாமி அனர்த்தத்தையும் மறந்து தன்படைகளை இலங்கைக்கு அனுப்புகின்றது.

ஆக, ஒட்டுமொத்தத்தில் எந்தநாட்டுப் படையணிகள் வந்தாலும் அது தமிழ்மக்களுக்கு பாதகமாகவே அமையும் என்பதை மக்கள் உணர்ந்தாக வேண்டும்.

# புலிகளை மட்டம் தட்டவே அந்நியப் படைகள் வருகை

## புதிய இடதுசாரி முன்னணி கண்டனம்.

2004 டிசம்பர் 26 கடற்கோள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு உதவுமுகமாக இலங்கை அரசாங்கம் சர்வதேச சமூகத்திற்கு விடுத்திருந்த அழைப்பின் பேரில் அந்நிய ஆயுதப்படையினர் இலங்கை வருவதை புதிய இடதுசாரி முன்னணி கண்டித்துள்ளது. வடக்கிலும் தெற்கிலும் ஏறத்தாள 30 ஆயிரம் பேர் கொல்லப்பட்டும் 20 இலட்சத்திற்கும் அதிகமானோர் இடம் பெயர்ந்தும் உள்ளதுடன் பெரியளவில் உட்கட்டமைப்பு தொகுதிகள் அழிக்கப்பட்டுமுள்ளன. இதனைப் பயன்படுத்தி புனரமைப்பு என்ற போர்வையில் அமெரிக்கா மற்றும் ஏனைய அந்நிய ஆயுதப்படையினரை இலங்கைக்கு வரவழைப்பது முற்றிலும் வேண்டத்தகாதது. கடற்கோள் அனர்த்தம் நிகழ்ந்து மூன்று நாட்களாக மூச்சேவிடாத அமெரிக்க நிர்வாகம் தனது தேவைக்காக இலங்கை அரசாங்கம் விடுத்த வேண்டுகோளின் போர்வையில் உள்நோக்கத்துடன் ஆயுதப்படையினரை அனுப்பியுள்ளது. அவாகள் இலங்கை மண்ணில் கால்பதித்து ஒரு புறத்தில் ஆட்சியாளர் சார்பில் தமிழீழ விடுதலைப் புலிகளை மட்டம் தட்டுவதும் தமிழமக்களின் விடுதலைப் போராட்டத்தினைக் கட்டுப்படுத்துவதுமே அவர்களின் நோக்கமாகும் என அது வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

உலக முதலாளித்துவத்தின் பின்செல்ல இலங்கையை நிர்ப்பந்திப்பதற்கும் இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பூகோள அமைப்பினைப்பயன்படுத்தி தனது நவகாலனித்துவ அல்லது மீள் குடியேற்றவாத நிகழ்ச்சித் திட்டத்தினை பட்டவர்த்தனமாக முன்னெடுப்பதற்குச் செயற்படுவதாகுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## கண்ணிவெடி அகற்றும் பணி மீண்டும் ஆரம்பம்

டெனிஸ் கண்ணிவெடியகற்றும் பிரிவினர் தமது (கண்ணிகள் அகற்றும்) பணியினை இன்று மீண்டும் ஆரம்பிக்கவுள்ளனர்.டெனிஸ் கண்ணிவெடியகற்றும் பிரிவின் ஊழியாகள் யாவரும் கடந்த இரு மாதங்களாக கட்டாய விடுமுறையில் சென்றிருந்தனர்.

இவாகள் தமது பணிகளை இன்று முதல் குப்பிளான், மல்லாகம் , ஏழாலை, புன்னாலைக்கட்டுவன் போன்ற பிரதேசங்களில் தொடரவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(க-106)

# அரசு–புலிகள் ஒன்றிணைந்து பணிகளை முன்னெடுப்பது சமாதானப் பேச்சை மீள ஆரம்பிக்க உத்வேகமளிக்கும்

## புனர்நிர்மாண பிரதியமைச்சர் நம்பிக்கை

(மட்டக்களப்பு)

புனர்நிர்மாண பிரதியமைச்சர் ஹாமு திஸாநாயக்க நேற்று முன்தினம் மட்டக்களப்புக்கு விஜயம் செய் துள்ளார்.

ஜனாதிபதியின் விசேட பிரதிநிதியாக மட்டக்களப் புக்குச் சென்ற பிரதியமைச்சர் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளையும் மட்டக்களப்பு அரசாங்க அதிப ரையும் சந்தித்து கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப் படட மக்களின் நிலை தொடர்பாகக் கேட்டறிந்தார்.

இச சந்திப்பின பின் கருத்து வெளியிட்ட பிரதியமைச்சா ஹாமு திஸாநாயக்க, பாதிக்கப்பட்ட மக் களின் அவலங்களைப் பார்க்கும் போது பெரும் துயரடை கின்றேன். விடுதலைப்புலிகளின் பிரதி நிதிகளு டனும் அரசாங்க அதிபருடனும் பாதிக்கப்பட்ட மக் களின் வாழ்வை மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட வேண் டிய நடவடிக்கைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத் தியுள்ளேன்.

அரசும் விடுதலைப் புலிகளும் இணைந்து மக்களின அவலங்களை நீக்குவதில் ஈடுபடுவதை நோக்கும்போது எமக்கு நம்பிக்கை என்ற ஒளிக்கீற்று ஏற்படுகிறது.

அரசாங்கத்துடன் இணைந்து புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை முன்னெடுக்க விடுதலைப் புலி கள் இனங்கியுள்ளமை தேக்க நிலையிலுள்ள சமா தானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பதில் புதிய உத்வேகத்தை அளிக்குமென்று நான் நம்புகின்றேன் என்று தெரிவித்தார். (ந-8)

## கானான் இல்லத்தில் சிறுவன் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் அநாதரவாக அலைந்து திரிந்த 9வயது சிறுவன் ஒருவனை சிறுவனின் நலன் கருதி யாழ். பொலிஸார் அச் சிறுவனைக் கைது செய்து யாழ். நீதி மன்றில் நேற்றுமுன்தினம் ஆஜர்படுத்தினர்.

இச் சிறுவனின் எதிர்கால நலன் கருதி, இச் சிறு வனை நீதி அமைச்சினால் அங்ககரிக்கப்பட்ட சிறுவா பராமரிப்பு இல்லமான வட்டுக் கோட்டையில் இயங்கும் கானான் சிறுவா் இல்லத்தில் சேர்க்குமாறு நீதிபதி இ.த.விக்னராஜா உத்தரவிட்டார்.

அத்துடன் சிறுவனை சிறுவர் இல்லத்துக்கு அண்மையல் உள்ள பாடசாலையில் சேர்க்குமாறும் சிறுவனுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கும் படியும்நதிபதி இ.த.விக்னராஜா உத்தரவு பிறப்பித்துள்ளார். (ந-5)

## தொற்றுநோய் ஏற்பட்டால் தனிமைப்படுத்தி சிகிச்சை

(மருதங்கேணி)

கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட நலன்புரி நிலையங்களில வசிக்கும் மக்களுக்கு தொற்றுநோய் அபாயம் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் இருந்து வருவதால் அவ்வாறான நோயாளர்களைத் தனிமைப் படுத்தி சிகிச்சை வழங்குவதற்கு தமிழீழ சுகாதாரத் துறையினர் தீர்மானித்துள்ளனர்.

தொற்று நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்கென மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையை சுகாதாரத்துறையினர் தெரிவு செய்துள்ளனர்.

வடமராட்சி பகுதியில் 22ஆயிரத்து 562ற்கும் அதிகமானவர்கள் முகாம்களில் தங்கியுள்ளனர்.

இந்த முகாம்களில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதால் தொற்றுநோய் ஏற்பட்டுவதற்கு வாய்ப்பு உண்டு. இதனால் தொற்றுநோய்க்குள்ளானவர்க்ளை இனம் கண்டு உடனடியாக அப்புறப்படுத்தித் தனிமையான இடத்தில் சிகிச்சையளிப்பதற்காகவே மருதங்கேணி வைத் தியசாலையைத் தெரிவு செய்துள்ளனர்.

நலன்புரி நிலையங்களிலிருந்து நீண்ட தூரத்தில் அமைநதுள்ள வைத்தியசாலையையே இவர்கள் தெரிவு செய்து அங்கு சகல வசதிகளையும் ஏற்படுத்தியுள் ளனர். (க-35)

## வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் மத்திய நிலையங்கள் பல பாதிக்கப்பட்ட மாவட்டங்களில்!

(கொழும்பு)

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் மத்திய நிலையங்களைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

காலி,மாத்தளை, தங்காலை, களுத்துறை ஆகிய பகுதிகளில் மத்திய நிலையங்களைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்புப் பெற்றுச் சென்றுள்ள குடும்பங்களில் சுனாமியால் பாதிக்கப் பட்ட அல்லது உயிரிழந்த உறுப்பினர்களின் விபரங்கள் இந்த நிலையங்கள் மூலம் சேகரிக்கப்படவுள்ளது.(ந-8)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

இறைவனுக்கே செய்யும் வழிபாடாக எண்ணி ஏழைகளுக்கும் துயருறுபவர்களுக்கும் பலவீனர்களுக்கும் சேவை செய்யுங்கள். அதைச் செய்துவிட்டால் பலன் இரண்டாம் பட்சம்தான். இலாபம் கருதாமல் செய்யப்படுகின்ற இத்தகைய செயல்கள் ஆன்மாவிற்கு நன்மை செய்கின்றன. பரலோக சாம்ராஜ்யம் இத்தகையவர்களுடையது.

சுவாமி விவேகானந்தர்

# நிவாரணப் பணிகள்...

சுனாமி இராட்சத அலைத் தாக்கத்தினால் இலங்கை மிகப் பாரிய மனிதப் பேரவலத்தை சந்தித்து நிற்கிறது. இதன் தாக்கம் வடக்கு கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளிலே மிகப்பாரிய மனிதப் பேரவலமாக வெடித்திருக்கின்றது.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும், புனர் மைப்பு நடவடிக்கைகளை தொடரவும் பெருந்தொகையான அளவு வெளிநாட்டு உதவிகள் குவிந்தவண்ணமுள்ளன.

இந்த வேளையில் ஜனாதிபதி சந்திரிகா வடக்கு கிழக்கு உட்பட சுனாமி அலைத்தாக்கத்தால் பாதிக்கப்பட்ட சகல மாவட்டங்களிலும் நிவாரணப்பணிகள், நலன்புரிசேவைகள் பாதுகாப்பு, புனர்வாழ்வு போன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் ஒருமுகப் படுத்தி முப்படைகளின் பொறுப்பில் அவற்றை ஒப்படைக்கத் தீர்மானித்துள்ளார்.

இந்த அடிப்படையில் நிவாரணம் மற்றும் புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்ள மாவட்ட இராணுவக் கட்டளை அதிகாரிகள் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் நிவாரணம் மற்றும் புனர்வாழ்வுப்பணிகளுக்கு பொறுப்பாக மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனும் மட்டக்களப்பில் மேஜர் ஜெனரல் வஜிர விஜய குலரத்தினவும் அம்பாறையில் கேணல் என்.ஏ.ஜே.எஸ் டயசும், திருகோணமலையில் மேஜர் ஜெனரல் பாலசூரியாவும் வவுனியாவில் மேஜர் ஜெனரல் பழனிகுலதுங்கவும் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் மாவட்டரீதியான நிவாரணப் பணிக்குழு இணைப்பாளர்களுடன் இணைந்து செயற்படுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அரசும் விடுதலைப்புலிகளும் இணைந்து தமிழர் தாயகப்பகுதியில் நிவாணம் மற்றும் புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்வதென்று முன்னர் தெரிவித்த ஜனாதிபதி தற்பொழுது விடுதலைப்புலிகளை அதிலிருந்து ஒதுக்கும் நோக்கிலேயே முப்படையினரை இந்நடவடிக்கைக்குள் உளவாங்கியிருப்பதாக அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க ஜனாதிபதியின் இந்நடவடிக்கைக்கு தமிழத் தேசியக்கூட்டமைப்பினரும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாகத் தெரியவருகிறது. (இ)

## அதிரடிப்படையால் பறிமுதல்

அம்பாறை கள்ளியந்தீவு, சக்தி வித்தியாலயம், விநாயகபுரம் கிராமசேவகர் பிரிவுக்கு உட்பட்ட அகதிமுகாம்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழத்தினாரால் கொண்டு செல்லப்பட்ட நிவாரணப் பொருட்கள் திருக்கோவில் விசேட அதிரடிப் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டதாக தமிழர் புனர்வாழ்வுக் கழக அம்பாறைப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருப்பதாக அம்பாறை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் குயிலின்பன் தெரிவித்துள்ளார்.

அததோடு இந்த முகாம்களில் சேவையில் ஈடுபட்டிருந்த பெண் போராளிகளை விசேட அதிரடிப் படையினர் தகாதவார்த்தைகளினால்பேசி தாக்குதல்நடாத்தியதாகவும் அவர் மேலும்தெரிவித்தார். (இ.4)

## வடமராட்சியில்...

நெல்லியடிப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு வந்த பருத்தித்துறை மாவட்ட நீதிவான் க.அரியநாயகம் விசாரணை மேற்கொண்டார். பிரேதப் பரிசோதனையை பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி கதிரவேற்பிள்ளை மேற்கொண்டார். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ச-52-35-113-101)

## அமெரிக்க...

கூட்டமைப்பில் பாரிய விரிசல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். கூட்டரசிடையே விரிசல் ஏற்பட்டால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு கவிழவேண்டிய நிலைமை ஏற்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

இலங்கைக்கு மீட்புப் பணி என்ற போர்வையில் வந்துள்ள அமெரிக்கப் படைகளை உடனடியாக வெளியேற்றவேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ச)


நாதன்ஸ் சினிமா
யாழ்ப்பாணம்
இன்றுமுதல் குதாகல ஆரம்பம்
இலங்கை மண் தாவடியின் மைந்தன்
ஜெய்ஆகாஷ், ஸ்ரீதேவிகா, வாணி நடிக்க



இயக்கம் அகத்தியன்
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்
விஜயகாந், லயா, சீதா, சுரத்பாபு, ராதாரவி நடித்த
கஜேந்திரா
இசை தேவா
கா.நேரம் 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

நிறைஞ்சனாஸ் (சங்கானை)
அஜித் (இருவேடம்) பூஜா
அட்டகாசம்
காட்சிநேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.45 (பு.நே)
AIRFORCE

நிரு ரியூசன் சென்ரர்
கோண்டாவில்
A/L 2007

| வர்த்தகப் பிரிவு | கலைப் பிரிவு | கணித விஞ்ஞானப் பிரிவு |
|---|---|---|
| ACC – திரு. பாலவாசன் | ECO – திரு. சண் | CHE– திரு. மகேஸ்வரன் |
| ECO – திரு. மோகன் | HC–திரு.சிவமகாலிங்கம் | PHY – திரு. கருணாநிதி |
| B.ST – திரு. யசோ | TA – மாவைலிங்கம் | CO.MAT – திரு.பிரதீபன் |
| ஆரம்பம் 12.01.05 புதன் 4.00மணி | LOG – திரு. சயந்தன் | BIO – திரு. தற்பரன் |
| | GEO – திரு. வேலா | |
| | DRA – திரு. மதி | |
| | P.SCI – திரு.இளங்கோ | (9146) |

London Language School
"The School with golden touch" (golden touch)
புத்தம் புதிய ஆண்டில் புதிய பிரிவுகள்
Foundation English for A/L
Communication English
IELTS/ TOEFL
FRENCH
FREE

புதிய பிரிவுகளுக்கான இலவச விரிவுரைகளும், மற்றும் புதிய பிரிவுகளும் எதிர்வரும் 09/01/2005 அன்று 10.30க்கு ஆரம்பமாகின்றது.

"சுனாமி பேரனர்த்தத்தினால் அல்லலுறற உறவுகளிற்கான நிவாரணப் பணியில் இணைந்திருந்தமையினால் வகுப்புக்கள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. தற்பொழுது அனைத்து வகுப்புக்களும் வழமைபோல் மீண்டும் நடைபெறுகின்றன"

தொடர்புகளுக்கு:-
0777-222300, 0777-238605, 0776176383
Addresses: No 774, Hospital Rd Jaffna
Pacific Net Computers
No 01-Brown Rd
Jaffna
T.P - 021 222 6413, 0777 - 763781 (9211)

JTI
2005, 2006 ஆண்டுக்கான கணனி மற்றும் தொழில்நுட்ப பயிற்சி நெறிகள் ஆரம்பம்
10.01.2005 (கிழமை நாட்களில்) 09.01.2005 (சனி, ஞாயிறு நாட்களில்)

DIPLOMA COURSES

Diploma in Microsoft Office 2003XP
- Introduction to Computer
- Word 2003XP
- Excel 2003XP
- Access 2003XP
- PowerPoint
- Introduction to Internet & E-Mail
Duration 06 Months

Diploma in Web Designing
- Introduction to Internet
- Front Page
- VB Script
- HTML
- Java Script
Duration 07 Months

Diploma in Software Engineering
- Introduction to Computer
- Windows 2003XP
- Ms DOS 8
- Word 2003XP
- Excel 2003XP
- Visual Basic 6.0
- Visual Foxpro 6.0
- C++
- Java
- HTML
- Internet, E-Mail
Duration 12 Months

Diploma in DesktopPublishing
- Introduction to Computer
- Word 2003XP
- PageMaker 7.0
- Corel Draw 11
- Photo Shop 7.0
Duration 04 Months

Diploma in Hardware Engineering
- Principles of Computer Hardware
- Installation Software / Hardware
- Servicing, Repairing
- Hardware Devices
- Networking, Fax Modem Connection
- Multimedia, Internet
- Operating Systems
- DOS, Windows
- Assembling
Duration 04 Months

Diploma in Computer Programming
- Introduction to Computer
- Visual Basic 6.0
- Pascal
- Visual Foxpro 6.0
- Oracle
- Internet & E-Mail
- C++
Duration 08 Months

Diploma in Visual Basic Programming
Duration 04 Months

CERTIFICATE COURSES
- MsWord 2003 XP
- MsExcel 2003 XP
- MsAccess 2003 XP
- Inter Net & Email
- CorelDraw 11
- Adobe Pagemaker 7.0
- Adobe Photoshop 7.0
- Adobe Premier
- HTML
- Java
- Visual Basic
- Quick Books
- Pascal
- C++
- Maya 5.0
- Flash

* RADIO, T.V AND VIDEO DECK REPAIRING
சகல இன றேடியோ,ரி.வீ,டெக் மற்றும் எலற்ரோனிக் உபகரணங்கள், Computer Monitor, Ups, Printer, Scanner, என்பன திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.
(காலம் 10 மாதங்கள்)

* MOTOR REWINDING AND ELECTRICAL WIRING
சகல இன, (f) பான், ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின்னிணைப்பு Single Phase, Three Phase இணைப்பு முறை என்பன பயிற்சி அளிக்கப்படும்.
(காலம் 07 மாதங்கள்)

* AIR CONDITIONING AND REFRIGERATION
சகல இன குளிர்சாதனப் பெட்டி மற்றும் எயர் கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
(காலம் 07 மாதங்கள்)

* MOTOR CYCLE MECHANISAM
சகல இன மோட்டார் சைக்கிள், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
(காலம் 06 மாதங்கள்)

* DIPLOMA IN ELECTRICAL AND ELECTRONICS TECHNOLOGY
(காலம் 12 மாதங்கள்)

* PLUMBING
(காலம் 03 மாதங்கள்)

மேலதிக விபரங்களுக்கு
JAFFNA TECHNICAL INSTITUTE
இல. 07, பலாலி வீதி யாழ்ப்பாணம்.
T.P:- 021-222 3335, 0773 086716
(C/944)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.01.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.